RE/MAX Realtron BLUE FORCE
TEAM BLUE FORCE
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710



மலர்:- 29, 25 நவம்பர் 2022 இதழ்:- 31

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600



NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan LL.B.
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund


மந்தையாய் வாழ்ந்த எந்தையர் வாழ்வில்
விந்தைகள் புரிந்து சிந்தையைக் கவர்ந்த
எங்கள் கரிகாலனே!
ஈழத்து மனிதனை தமிழனாய் உலகுக்கு
தரம் பிரித்துத் தந்த தலைவனே!
தமிழர் அம்மணத்தை மறைக்க
சோழர் கொடியில் ஆடை தந்தவனே!
தமிழீழத்தின் ஒரு பிடி மண்ணும்
பகைவனைக் கொல்லும்
அதிசயம் நிகழ்த்தியவன் நீ!
தமிழுக்குத் தோற்றமில்லை! - உனக்கு
வயதுமில்லை! மறைவுமில்லை!
தமிழோடு சேர்ந்து
உன் புகழ் வாழ வாழ்த்துகின்றோம்!
வாழ்க நீ! தமிழர் நாம் வாழ்வதற்கே!

அன்புடன்
T.K.பரமேஸ்வரன் -ஈழநாடு





தமிழீழ தேசத்தின் விடுதலைக்காக
தங்கள் உயிர்களை விடுதலை செய்தவர்கள்
தமிழர்களின் வீர மறவர்கள்!
களமாடி வீழ்ந்த அவர்கள்
கனவுகளைச் சுமந்தபடி நாம் நடப்போம்
தேச விடுதலை நோக்கி......

## இனப்பிரச்சனைக்குத் தீர்வாக அதிகாரப் பகிர்வு வழங்க சம்மதிப்பீர்களா? பாராளுமன்றத்தில் ரணில் பகிரங்கக் கேள்வி! தலைவர்கள் சம்மதம் தெரிவிப்பு!


விபரங்கள் 3ம் பக்கத்தில்



BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE


போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்!
உறவுகளே! நவம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!


KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX Royal Properties
MORTGAGE ALLIANCE

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com


### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# இனப்பிரச்சனைக்குத் தீர்வாக அதிகாரப் பகிர்வு வழங்க சம்மதிப்பீர்களா? பாராளுமன்றத்தில் ரணில் பகிரங்கக் கேள்வி! தலைவர்கள் சம்மதம் தெரிவிப்பு!



இனப்பிரச்சினைக்கு தீர்வாக அதிகாரப் பகிர்வுக்கு ஐக்கிய மக்கள் சக்தி,ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் சம்மத த்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சபையில் வைத்து பெற்றுக் கொண்டார்.

நாட்டின் இனப்பிரச்சினைக்கு தீர்வாக அதிகாரப் பகிர்வு வழங்க சம்மதிப்பார் களா என சபையில் வைத்து கட்சி களிடம் நேரடியாக கேட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இது தொடர்பில் டிசம்பர் 12ஆம் திகதிக்குள் ஒரு சந்தி ப்பை நடத்தவும் அரசியல் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்தார்.

2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி, பிரதமர் அலுவலகம், பாராளுமன்றம் உள்ளிட்ட 16 விடயதானங்களுக்கான நிதி ஒதுக் கீடுகள் குறித்து புதன்கிழமை (23) இடம் பெற்ற குழு நிலை விவாதத்தில் ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க உரையாற்றினார்.

ஜனாதிபதி தனது உரையில் தனக்கு முதலில் உரையாற்றிய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பி னர் எம்.ஏ. சுமந்திரன் ஜனாதிபதியின் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற் கான அழைப்பு தொடர்பில் அதில் காணப்பட வேண்டிய தீர்வு தொடர் பிலும் முன் வைத்த கருத்துக்கள் தொடர்பில் பதில் வழங்கினார்.

இதன் போது அவர் எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவும் பிரதான எதிர்க்கட்சி யான ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப் பினர் லக்ஷ்மன் கிரியெல்லவைப் பார்த்தது நாட்டின் இனப்பிரச்சினைக்கு தீர்வாக அதிகாரப் பகிர்வு வழங்க சம்மதிப்பீர்களா என வினவினார்.

இதற்கு பதிலளித்த லக்ஷ்மன் கிரி யெல்ல ,உங்கள் பாட்டனாரும் அதிகாரப் பகிர்வை வலியுறுத்தியவர். நானும் எப்போதும் இனப் பிரச்சினைக்கு தீர் வாக அதிகாரப்பகிர்வு வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்துபவன். நாம் எப்போதும் அதற்கு தடையாக இருந்த தில்லை. சில கட்சிகள் தான் அதற்கு தடை செயற்பட்டன, தற்போதும் செயற் படுகின்றன.

இங்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச இருக்கின்றார். அவர் 13 பிளஸ் தீர்வு என்றார். இந்த அதிகாரப்பகிர்வு க்கு அவர் சம்மதமா என அவரிடமே கேட்போம் எனக் கூறிவிட்டு மஹிந்த ராஜபக்சவை பார்த்து அதிகாரப்பகிர்வு வழங்க நீங்கள் சம்மதமா?' எனக் கேட் டார்.

இதற்கு மஹிந்த ராஜபக்ச ஆசனத்தில் அமர்ந்திருந்தவாறு சிரித்துக் கொண்டு சம்மதம் என்பதற்கு அறிகுறியாக தலையை அசைத்தார். ஆனால் விடாத லக்ஷ்மன் கிரியெல்ல தலை யசைத்தால் மட்டும் போதாது. பாராளு மன்றத்தில் எழுந்து நின்று கூற வேண் டும் என்றார். இதனையடுத்து உடனடி யாக எழுந்த மஹிந்த ராஜபக்ச எனக்கு சம்மதம் என்றார்.

உடனடியாக பிரதமர் தினேஷ் குணவர்த பக்கம் தனது கவனத்தை திருப்பிய லக்ஷ்மன் கிரியெல்ல பிரதமர் இதற்கு சம்மதிக்கின்றாரா எனக் கேட்டார். ஆனால் எந்தப் பதிலும் கூறாது பிரதமர் தினேஷ் குணவர்த்தன சிரித்தவாறு அமர்ந்திருந்தார். பார்த்தீர்களா பிரதமர் எப்போதும் அதிகாரப் பகிர்வுக்கு எதிரானவர். அவர் சம்மதிக்க மாட்டார் என்றார். இதன்போது தமிழ் முற்போக்கு கூட்டணித்தலைவர் மனோ கணேசனை நோக்கிய ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க "என்ன மனோ அதிகாரப்பகிர்வுக்கு நீங்கள் சம்மதமா எனக் கேட்டார். ஆம் நாம் அதனை ஏற்றுக் கொள்கின்றோம் என மனோகணேசன் பதிலளித்தார்.

அப்படியானால் சுமந்திரன் நீங்களும் சம்மதம் தானே என ஜனாதிபதி ரணில் கேட்ட போது, இது தொடர்பில் வரவு செலவுத்திட்ட விவாதம் முடிந்த பின்னர் ஒரு திகதியை குறிப்பிட்டு கட்சித் தலைவர்களுடன் ஒரு சந்திப்பை நடத்தி னால் நல்லது என சுமந்திரன் குறிப் பிட்டார்.

இதனை தொடர்ந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஐக்கிய மக்கள் சக்தியினரைப்பார்த்தது அப்படியானால் நீங்கள் சம்மதம் தானே என மீண்டும் கேட்டபோது ஒரு உறுப்பினர். அதனை தலைவர்தான் தீர்மானிக்க வேண்டும் என்கிறார்.

சரி அப்படியானால் இன்று இந்த விவா தம் முடிவடைவதற்கு உங்கள் தலை வரின் முடிவை எனக்கு கேட்டு சொல் லுங்கள் என ஜனாதிபதி ரணில்விக்கிரம சிங்க கூறிய போது எழுந்து கருத்து ரைத்த மனோகணேசன் ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணி அதிகாரப்பகிர்வு க்கு இணக்கம் என்பதனால் தான் நாம் அதில் அங்கம் வகிக்கின்றோம் எனக் கூறினார்.

நல்லது அப்படியானால் வரவு செலவுத் திட்ட விவாதம் டிசம்பர் 8 ஆம் திகதி முடிவடைந்த பின்னர் 12ஆம் திகதிக் குள் ஒரு சந்திப்பை நடத்துவோம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப் பிட்டார்.

இதேவேளை இனப்பிரச்சினைக்கு தீர்வு காண ஜனாதிபதி எடுத்து வரும் முயற்சியை வரவேற்கின்றேன். ஜனாதி பதியின் இந்த பிரவேசத்தை சிறந்த சந்த ர்ப்பமாக மாற்றிக் கொள்ள வேண்டும். அதற்காக நாங்கள் அனைவரும் அணி திரண்டு இந்த பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைப்போம் என ஸ்ரீலங்கா முஸ் லிம் காங்கிரஸ் தலைவர் ரவுப்ஹக்கீம் தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமார துங்க இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் வகையில் தீர்வுப்பொது ஒன்றை கொண்டு வந்தார். அப்போது அவரின் அமைச்சரவையில் மஹிந்த ராஜபக்ஷ் வும் ஒரு அமைச்சராக செயற்பட்டி ருந்தார். அந்த தீர்வுப்பில் பிராந்தியங் களின் ஒன்றிணைப்பு என்று தான் குறிப்பிடப்பட்டிருந்தது. அதனை தற்போது வேறு மாதிரி குறிப்பிடப்படு கின்றது. அது பிரச்சினை அல்ல.

ஆனால் அதிகார பரவலாக்கம் எவ்வாறு இடம்பெறுகின்றது. மத்திய அரசுக்கும் மாகாண அரசுக்கும் அதிகார பரவலா க்கம் எவ்வாறு இடம் பெறுகின்றது என்பது தான் முக்கியமானது.

அதனால் ஜனாதிபதி அதிகார பரவலாக் கம் தொடர்பாக சபையில் கருத்துக் களை கேட்டார். அதற்கு இணக்கமா என கேட்டார். ஜனாதிபதியின் இந்த பிரவேசத்தை சிறந்த சந்தர்ப்பமாக மாற்றிக்கொள்ளவேண்டும்.

அதற்காக நாங்கள் அனைவரும் அணி திரண்டு இந்த பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைப்போம். அதனால் இந்த விடயத்தில் மாறுபட்ட அரசியல் கரு த்துக்களை வைத்துக் கொண்டு நாங்கள் செயற்படப் போவதில்லை. ஆனால் அதிகார பரவலாக்கல் தான் இங்கே முக்கிய விடயம் என்றார்..

**உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 30வது ஆண்டு விழா:- 23 ஏப்ரல் 2023 "சங்கீத சங்கமம் 2023"**


**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
Barrister, Solicitor & Notary
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544




# இனப்பிரச்சனைக்கான தீர்வில் அனைத்து இன மக்களும் திருப்தியடையும் தீர்வையே ஏற்போம் - சுமந்திரன்

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் ஜனாதிபதியின் முன்னெடுப்புகளை நாங்கள் வரவேற்கின்றோம். எல்லாவற்றையும் தீர்ப்போம் என்றும் கூறியுள்ளார். இனப் பிரச்சினை விடயத்தில் அனைத்து இன மக்களும் திருப்தியடையும் தீர்வையே நாங்கள் ஏற்றுக்கொள்வோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (நவ.23) இடம் பெற்ற 2023ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி, பிரதமர் அலுவலகம், பாராளுமன்றம் உள்ளிட்ட 16 விடயதானங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,



வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பில் எதிராக வாக்களிக்கவே தமிழ் தேசிய கூட்டமைப்பு முதலில் தீர்மானித்தது. ஆனால் பின்னர் எதிராக வாக்களிப்பதில்லை என்ற தீர்மானத்தை எடுத்தோம். ஏனென்றால் ஜனாதிபதி கடந்த நாட்களில் பல சந்தர்ப்பங்களில் தமிழ் தேசிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும் என்று வலியுறுத்தினார்.

தமிழ்க் கட்சிகளுக்கு கலந்துரையாடுவதற்காக அவர் அழைப்பு விடுத்திருந்தார். இதன்படி ஜனாதிபதிக்கு பதிலளித்து அவருக்கு எங்களின் நம்பிக்கையை வெளிப்படுத்துவதற்காக நாங்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. தெரிவிக்கும் விடயங்களை செயற்பாட்டில் உறுதிப்படுத்தும் போதே நல்லிணக்கம் ஏற்படும். உண்மைகளை மூடி மறைத்தால் நல்லிணக்கம் ஏற்படாது.

இந்நிலையில் காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் அமைக்கப்பட்டு 5 வருடங்கள் கடந்துள்ளபோதும் காணாமல் போனோர் தொடர்பாக எந்த விசாரணையும் இடம்பெறவில்லை.

சொற்கள் செயற்பாடுகளில் இருக்க வேண்டும். காணாமல் போனோர் தொடர்பாக ஆராய அமைக்கப்பட்ட அலுவலகத்துக்கு 2017 இல் 5 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டது. பின்னர் 2020,2021 வருடத்தில் அதற்கு மேலதிகமாக 300 மில்லியன் ஒதுக்கப்பட்டது. மொத்தமாக 800மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ள போதும் 11மில்லியன் ரூபா மாத்திரமே செலுத்தப்பட்டிருக்கின்றது.

அதேநேரம் காணாமல் போனவர்கள் யாரும் இல்லை என தவிசாளர் தெரிவித்திருக்கிறார். இப்படி தெரிவிக்கும் போது எப்படி நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்.


அத்துடன் காணிகளை விடுவிப்பதாக அரசாங்கம் கூறியது. பலாலி விமான நிலையத்தை சுற்றி காணிகளை விடுவிப்பதாக கூறிய போதும் அதனை நிறைவேற்றவில்லை. ஒருபுறத்தில் நல்லிணக்கம், மீள்குடியேற்றம் தொடர்பில் கூறுகின்ற போதும், மறுபுறத்தில் அதற்கு எதிரான விடயங்கள் நடக்கின்றன. தற்போதும் காணிகள் அபகரிக்கப்படுகின்றன. அதனை விசாரிப்பதாக ஜனாதிபதி கூறியுள்ளார். அதனை நாங்கள் வரவேற்கின்றோம்.

மேலும் வனஜீவராசிகள் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம் என்பன இணைந்து அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரத்தை பயன்படுத்திக் கொண்டு விசேட சட்டங்கள் மூலம் மக்களின் காணிகளில் வெளியேற்றுகிறார்கள். தலைமுறையாக வாழ்ந்த இடங்களில் ஒரே இரவில் எல்லைகளை அமைத்து மக்களை வெளியேற்றுகின்றனர். இப்படி இருக்கையில் எவ்வாறு நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்.

நாங்கள் ஜனாதிபதியின் முன்னெடுப்புகளை வரவேற்கின்றோம். எல்லாவற்றையும் தீர்ப்போம் என்று கூறியுள்ளார். எல்லா மக்களும் இணங்கும் தீர்மானமாக இருந்தால் நாங்கள் அதனை ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

ஒரு பிரிவு அதனை எதிர்த்தால் அது நிலைபேரானது அல்ல. இதனை நாங்கள் ஏற்கின்றோம். நாட்டின் அனைத்து மக்களும் திருப்தியடைய வேண்டும். பல்வேறு செயற்முறைகளை கடந்து வந்துள்ளோம். நாங்கள் ஒருநாள் ஒன்றாக அமர்ந்தால் தீர்வு காண முடியும். தீர்வு விடயத்தில் அறிந்திருக்க வேண்டிய அனைத்தையும் ஜனாதிபதி அறிந்துள்ளார்.

40க்கும் மேற்பட்ட நாடுகள் சமஷ்டி முறையிலான நாடுகளாக இருக்கின்றன. அந்த நாடுகளே முன்னேற்றமடைந்ததாக உள்ளன. அங்கே அதிகார பரவலாக்கம் உள்ளது. இந்நிலையில் உலக நாடுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன, எங்கள் மக்கள் சுயமரியாதையுடன் வாழக்கூடிய அந்தத் தீர்வையே நாங்கள் கேட்டுநிற்கின்றோம். அதனை பெரும்பான்மை மக்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும். டொனமூறுக்கு முன்னர் சிங்களத் தலைவர்களும் அதனை கேட்டுள்ளனர். இதனால் இதில் தவறுகள் இருக்காது என்றார்.


ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin



ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்

அம்பாள் அடியார்களே!

27 நவம்பர் 2022 –ஞாயிறுக்கிழமை

அன்று மதியம் 12.00 மணிக்கு மண்ணிற்காக மரணித்த மக்களுக்கும் மாவீரர்களுக்கும் விஷேட ஆத்மசாந்தி பூஜை நடைபெறும்.

அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் அன்னதானமும் வழங்கப்படும்

16 நவம்பர் 2022 புதன்கிழமை
ஐயப்பன் மண்டல பூஜை ஆரம்பம் .

ஐயப்பன் மாலை போட விரும்பும் ஐயப்ப பக்தர்கள், ஐயப்ப படிகட்டுப் பூஜை செய்ய விரும்பும் பக்தர்கள் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

21 நவம்பர் 2022 திங்கட்கிழமை
சோம பிரதோஷ விரதம்

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# கனடிய அரசின் அனுமதியின்றி இலங்கையில் முதலீடு செய்வதற்கு ஊக்குவித்த எம்.பி.க்கள் குறித்து ஹரி அதிருப்தி!

அண்மையில் கனேடிய வர்த்தக சமுகத்துடன் இலங்கை வந்த கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹான் டொங் மற்றும் திருமதி ரேச்சல் தோமஸ் ஆகியோர் கனேடிய அரசாங்கம் சார்பில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி செல்லவில்லை என கனேடிய ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.




கனேடிய வர்த்தக சமூகத்தை இலங்கையில் முதலீடு செய்ய ஊக்குவிப்பதற்காக கனேடிய அரசாங்கத்தின் சார்பில் இலங்கைக்கு விஜயம் செய்ய கனேடிய அரசாங்கம் அவர்களுக்கு அனுமதி வழங்கவில்லை. ஹான் டோங் மற்றும் திருமதி ரேச்சல் தோமஸ் ஆகியோர் கனேடியர்களை மோசடி மற்றும் ஊழல் நிறைந்த ஒரு தோல்வியுற்ற நாட்டில் முதலீடு செய்ய ஊக்கு விப்பதில் தனது வருத்தத்தை தெரிவிப்பதாக ஹரி ஆனந்தசங்கரி,குறிப்பிட்டுள்ளார். இதேவேளை இலங்கை சென்ற மேற்படி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிபர் ரணில் விக்ரமசிங்க மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோரை சந்தித்து கலந்துரையாடி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ராஜீவ்காந்தியைக் கொலை செய்ய பயன்படுத்திய வெடி மருந்து புலிகளுக்குக் கிடைக்காது என்கிறார் மூத்த வழக்கறிஞர்

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ்காந்தி கொலை வழக்கில் பயன்படுத்தப்பட்ட வெடிகுண்டு மருந்தான ஆர்டிஎக்ஸை திறந்த சந்தையில் பெற்றுக் கொள்ள முடியாது. இது எங்கும் கிடைக்கவும் கிடைக்காது. இது அமெரிக்காவில் மாத்திரமே ஒரு தொழிற்சாலையில் தயார் செயயப்படுகின்றது என மூத்த வழக்கறிஞர் துரைசாமி தெரிவித்துள்ளார்.

வெளியில் எங்கும் இந்த மருந்து கிடைக்காது. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு இந்த வெடி மருந்து கிடைக்காது. இலங்கை அரசாங்கத்தின் இராணுவத்திற்கும் இந்த மருந்து கிடைக்காது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ்காந்தி கொலை வழக்கில் கைதாகி 30 வருடங்களுக்கும் மேல் சிறைத் தண்டனை அனுபவித்து வந்த 7 பேர் இந்த வருடத்தில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், அவர்கள் சார்பாக பல வருடங்களாக வாதிட்டு வந்த மூத்த வழக்கறிஞர் துரைசாமி இது குறித்து தொடர்ந்தும் விபரிக்கையில், அத்தோடு அமெரிக்க அரசாங்கமானது எல்லா அரசாங்கத்திற்கும் அந்த ஆர்டிஎக்ஸ் மருந்தை வழங்கிவிடாது. குறிப்பிட்ட நாடுகளுக்கு மாத்திரமே அமெரிக்க அரசாங்கம் ஆர்டிஎக்ஸ் மருந்தை வழங்கும். அதில் இந்தியாவும் ஒன்று.

அப்படியென்றால், தமிழீழ விடுதலைப் புலிகளிடமும் இந்த மருந்து கிடையாது, இலங்கை இராணுவத்திடமும் கிடையாது. ஆனால் ராஜிவை கொல்ல பயன்படுத்திய வெடிகுண்டில் காணப்பட்டது ஆர்டிஎக்ஸ் எனில் இது எங்கிருந்து கிடைத்தது என்பதை சிபிஐ விசாரிக்க வேண்டும். ஆனால் அது நடத்தப்படவில்லை.

அப்படியே நடத்தப்பட்டிருந்தாலும் உண்மையான குற்றவாளிகள் தப்பித்துச் சென்று விடுவார்கள் என்று தெரிவித்து அந்த உண்மைகள் மறைக்கப்பட்டிருக்கலாம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கையில் 22 இலட்சம் சிறுவர்களுக்கு மனிதாபிமான உதவிகள் தேவை!



இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி காரணமாக வெளிநாட்டு வேலைகளுக்கு செல்லும் தொழிலாளர்களின் எண்ணிக்கையும் இவ்வருடம் 286 வீதத்தால் அதிகரித்துள்ளதாக **UNICEF** அறிக்கை தெரிவித்துள்ளது. இலங்கை யில் 4.8 மில்லியன் சிறுவர்கள் கல்வி கற்க வேண்டும் என யுனிசெப்பின் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை இலங்கையில் சுமார் 56,000 குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு உடனடி சிகிச்சை தேவைப்படுவதாகவும் ருஜேஊநுகு அறிக்கை தெரிவித்துள்ளது.இலங்கையில் 22 இலட்சம் சிறுவர்களுக்கு மனிதாபிமான உதவிகள் தேவைப்படுவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.


ஐந்து இலங்கை குடும்பங்களில் இரண்டு குடும்பங்கள் தமது மாத வருமானத்தில் 75 வீதத்தை உணவுக்காக செலவிடுகின்றனர் என்றும் 6.2 மில்லியன் மக்கள் மிதமான உணவுப் பாதுகாப்பின்றி உள்ளனர் என்றும் 66,000 பேர் கடுமையான உணவுப் பாதுகாப்பின்றி உள்ளனர் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கையில் பிறப்புச் சான்றிதழில் இருந்து "இனத்தை" நீக்க முன்மொழிவு

பிறப்புச் சான்றிதழில் இருந்து இனம் குறித்த தகவலை நீக்கபட வேண்டும் என பதிவாளர் நாயகம் திணைக்களத்தால் நீக்குவதற்கான முன்மொழியப்பட்டுள்ளது. பிறப்புச் சான்றிதழில் சிங்களம், தமிழ், முஸ்லிம், மலாய் மற்றும் இந்திய வம்சாவளியினர் என தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் ஆகிய பதங்கள் ஆவணத்தில் இருந்து நீக்கப்படும் என பதிவாளர் நாயகம் பிரபாத் அபேவிக்ரம தெரிவித்துள்ளார்.

சமூகத்தில் நிலவும் பிரச்சினைகள் மற்றும் சர்வதேச ரீதியில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை கருத்திற்கொண்டு இந்த பிரேரணை முன் வைக்கப்பட்டுள்ளதாகவும், பல்வேறு தரப்பினரிடமிருந்தும் இனத்தை நீக்குவதற்கு எதிர்ப்புகள் எழுந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிறப்புச் சான்றிதழில் சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிமுறைகளின்படி வேறு சில திருத்தங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, பிறப்புச் சான்றிதழை தாய்மொழியில் பெற்றுக்கொள்ள முடியும், ஆனால் எதிர்காலத்தில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அதனை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே வெளிநாடு செல்லும்போது ஆவணத்தை மீண்டும் மொழிபெயர்க்க வேண்டிய அவசியம் இருக்காது. அதில் சில பாதுகாப்பு ஏற்பாடுகள் உள்ளதாகவும், பிறக்கும் போது வழங்கப்படும் தேசிய அடையாள அட்டை எண்ணை சேர்க்க (22ம் பக்கம் பார்க்க)



# ஐ.நா.வின் தலையீட்டைக் கோருதல்?

ஐக்கிய நாடுகள் சபையின் தலையீட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரியதாக செய்திகள் வெளியாகியிருந்தன. ஐக்கிய நாடுகள் சபையின் எல்லையென்ன,அதனால் என்னவெல்லாம் முடியுமென்பதை, கடந்த பதின்மூன்று வருடங்களாக தமிழ் மக்கள் கண்டிருக்கின்றனர்.

2009இல் யுத்தம் மோசமாக முடிக்கப்பட்டதன் பின்னர் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில், சிறிலங்காவை பாராட்டி தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது. பின்னர் 2012இல் அமெரிக்க அனுசரனையுடன் அதே பேரவையில் சிறிலங்காவின் பொறுப்புக்கூறலை வலியுறுத்தி தீர்மொனமொன்று நிறைவேற்றப்பட்டது.

2012இலிருந்து தொடர்சியாக பல பிரேரணைகள் இலங்கையின் மீது நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. ஆனாலும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறவில்லை. ஏன் நிறைவேறவில்லை என்னும் கேள்விக்கான பதிலாக கோபப்படலாம், விமர்சனங்களை முன் வைக்கலாம் அல்லது, அவ்வப்போது வீதிகளில் இறங்கி பாதிக்கப்பட்ட மக்களின் அதிருப்திகளை வெளிப்படுத்தலாம். இதற்கப்பால் என்ன செய்வது? எவரிடமும் பதிலில்லை.

ஐ.நா மனித உரிமைகள் பேரவை மட்டுமல்ல, இன்று தமிழ் கட்சிகளிலுள்ளோர் அவ்வப்போது உச்சரித்து வரும், சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், சர்வதேச நீதிமன்றம் ஆகியவையும் சர்வலோக நிவாரணிகள் அல்ல.

அவற்றின் சுயாதீனத் தன்மைக்கு எல்லைகளும் வரையறைகளும் உண்டு. ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் முன்னைநாள் ஆணையாளர், நவிபிள்ளையே பேரவையின் பலவீனம் தொடர்பில் பேசியிருக்கின்றார்.

அதாவது மனித உரிமைகள் பேரவையானது புவிசார் அரசியல் போட்டிகளாலும் குறுகிய தேசியவாத நலன்களாலும் கட்டுப்படுத்தப்படுகின்றது. இதற்கு தனது சொந்த நாடான தென்னாபிரிக்காகூட விதிவிலக்கல்லவென்று, அவர் ஒரு முறை கூறியிருந்தார். இந்த யதார்த்தங்களை கருத்தில் கொள்ளாமல் ஐக்கிய நாடுகள் சபையிடம் அதிகம் எதிர்பார்ப்பது, இறுதியில் ஏமாற்றத்தையே தரும்.

சர்வதேச அமைப்புக்களின் மூலம் நீதியை பெறுவது மிகவும் சிக்கலான பொறிமுறையாகும். நிச்சயம் வாய்ப்பு கிடைக்குமென்பதற்கு எவ்வித உத்தரவாதங்களும் இல்லை. முயற்சிகளை செய்யலாம் ஆனால் அந்த முயற்சிகள் மீது மட்டுமே நம்பிக்கைவைத்து, ஏனைய வழி முறைகளை பரிசீலிக்காமல் விட்டால், இறுதியில் ஏமாற்றமே மிஞ்சலாம்.

ஐக்கிய நாடுகளின் தலையீட்டை புதிதாக கோர வேண்டியதில்லை. இறுதி யுத்தத்தின் போதும், யுத்தம் முடிவுற்ற காலத்திலிருந்தும், ஐக்கிய நாடுகள் சபையின் தலையீடுகள் பல்வேறு வழிகளில் நிகழ்ந்து கொண்டு தான் இருக்கின்றது.

2012இலிருந்து, தமிழர் பிரச்னை சர்வதேர அரங்கில் பேசுபொருளாக இருப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் தலையீடுகள்தான் பிரதான காரணமாகும். ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விடயம் பேசுபொருளாக இருப்பதன் காரணமாகவே இன்றும் பொறுப்புக் கூறல் விவகாரம் பேசுபொருளாக இருக்கின்றது. தமிழ் மக்களை பொறுத்தவரையில் இது ஒரு சாதக மான விடயம் தான். இதுவும் இல்லாமல் போவதையும் விட, இருப்பது நன்மையானது தான்.

ஐக்கிய நாடுகளின் தலையீடுகள், அதே போன்று ஏனைய நாடுகளின் தலையீடுகள் அனைத்துமே, சிறிலங்காவின் ஆட்சியாளர்களின் அனுசரனையோடு தான் விளைவுகளாக மாற முடியும்.

இந்த அடிப்படையில் தான் இதுவரையான அனைத்து விடயங்களும் இடம் பெற்றிருக்கின்றன. அவ்வாறில்லாது அவர்கள் நேரடியாக தலையீடு செய்ய வேண்டுமென்று நாம் கோரலாம் ஆனால் அது இன்றைய உலக நடைமுறையில் எட்டாக் கனியாகும். தமிழர்கள் உச்சபட்சமான விடயங்களை கோர வேண்டுமென்று கூறுவோர் உண்டு. அதனை நாமும் மறுக்கவில்லை.

உச்ச பட்சமாக கோரினால் தான் ஆகக் குறைந்தளவான விடயங்களையாவது சாத்தியப்படுத்த முடியும்.ஆனால் உச்சபட்சமான கோரிக்கைகளை முன் வைக்கும் தலைமைகளிடம், அவற்றை அடைய முடியா விட்டாலும் கூட அடையக் கூடியதை அடைய வேண்டுமென்பதில் தெளிவு இருக்க வேண்டும்.அதற்கான வேலைத்திட்டம் இருக்க வேண்டும்.

கடந்த பதின்மூன்று வருட காலத்தில், அவ்வாறான வேலைத்திட்டமொன்றை தமிழ் தேசியம் பேசும் கட்சிகள் கொண்டிருந்தாக தெரியவில்லை.

# ஐ.தே.க - பெரமுன சேர்ந்து புதிய கூட்டணி? ஜனாதிபதித் தேர்தலில் ரணில் பொது வேட்பாளர்!

ஐக்கிய தேசியக் கட்சியுடன் பொதுஜன பெரமுன புதிய அரசியல் கூட்டணியை உருவாக்கி அடுத்து நடக்கவுள்ள ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை பொதுவேட்பாளராக அறிவிக்க பஸில் ராஜபக்ஷ திட்டமிட்டுள்ளார் என்று அவருக்கு மிக நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பஸில் ராஜபக்ஷ நடத்திய உரையாடலில் இந்த விடயம் தொடர்பில் விவாதிக்கப்பட்டுள்ளது.

மேலும், கட்சி அரசமைப்பை முறையாக தயாரித்து மாநாட்டை நடத்தி பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி இடையே புதியஅரசியல் கூட்டணியை உருவாக்குவது. பல்வேறு தந்திரோபாயங்கள் ஊடாக பொதுஜன பெரமுனவின் அதிகாரத்தைக் கைப்பற்ற ஜனாதிபதி செயல்படுகிறார் என்று கூறப்படுகின்றது.

பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தர்களான நிமல் லான்சா போன்ற பாராளுமன்ற உறுப்பினர்களைப் பயன்படுத்தி ஜனாதிபதி இந்த நடவடிக்கையை மேற்கொள்கிறார் என்று அறிய வருகிறது.

ஆனால், தற்போது பொதுஜனபெரமுனவை பலப்படுத்தி ஜனாதிபதி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து அரசியல் கூட்டணி அமைத்து அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி வேட்பு மனுவை வழங்க பஸில் திட்டமிட்டுள்ளார்.

அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் பொதுஜன பெரமுன ஆகிய அரசியல் கூட்டணியுடன் பொதுத்தேர்தலில் போட்டியிடவும் பஸில் முன்மொழிந்துள்ளார் என்றும் அறிய வருகிறது.

இது இவ்வாறிருக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசைப் பலப்படுத்தும் நோக்கில் எதிர்க்கட்சி உறுப்பினர்களை வளைத்துப் போடும் வேலைகள் திரைமறைவில் இடம்பெற்று வருவதை அறிய முடிகின்றது. அரசு அதிகமாகக் கண் வைத்திருப்பது சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கியமக்கள் சக்தியில் தான். அக்கட்சி உறுப்பினர்கள் பலரை இரகசியமாகச் சந்தித்துப் பேச்சுக்கள் இடம் பெறுகின்றன என்று. அறிய முடிகின்றது.

ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக பாராளுமன்றில் நடைபெற்ற இரகசிய வாக்கெடுப்பில் சஜித் அணியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களித்

திருந்தனர். அவர்களுடனும் அவர்களின் ஏற்பாட்டில் அந்தக் கட்சியின் ஏனைய சில உறுப்பினர்களுடனும் பேச்சுக்கள் இடம்பெறுகின்றன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

அக்கட்சியின் முக்கியஸ்தரான ராஜித சேனாரத்னவும் ரணிலுடன் இணையவுள்ளர் என்று பரவலாகப் பேசப்படுகின்றது. அவர் இப்போதெல்லாம் அரசுக்கு ஆதரவாகப் பேசி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவர்களுக்கு அப்பால் ஏனைய கட்சித் தலைவர்களுக்கும் வலை விரிக்கப்பட்டுள்ளது. அவர்களுள் ஒருவர் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன். அவருடன் சேர்த்து அவரின் கட்சி உறுப்பினர்கள் அனைவரையும் முற்றாக இணைப்பதற்கான நகர்வு ஒன்று இடம்பெறுவதை அறிய முடிகின்றது.

மறுபக்கம், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் பாராளு



மன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான். அவரும் அரசுக்கான ஆதரவை வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார். கோட்டாபய தலைமையிலான அரசில் ஜீவன் அமைச்சுப் பதவியை வகித்தமை குறிப்பிடத்தக்கது.

## ஐ.நா. நிரந்தரப் பிரதிநிதியாக கோட்டா?

ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தர பிரதிநிதியாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவை நியமிக்க திரைமறைவில் நிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

கோட்டாபய ராஜபகஷ ஜனாதிபதியாக இருந்தபோது ஏற்பட்ட எதிர்ப்புகளைத் தொடர்ந்து ஜீலை மாதம் அவர் அமெரிக்கா செல்ல முயன்றார். ஏற்கனவே, அவர் அமெரிக்க குடியுரிமையை துறந்த நிலையில் அவருக்கு அந்த நாடு வீஸா அளிக்கவில்லை.

இதையடுத்து அவர் மாலைதீவு, சிங்கப்பூருக்கு சென்றார். அங்கிருந்து பதவியை இராஜிநாமா செய்த பின்னர் தாய்லாந்தில் தங்கியிருந்து விட்டு நாடு திரும்பினார். இதனிடையே, கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக அமெரிக்காவில் போர் குற்ற வழக்கு ஒன்று நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில், புதிய ஜனாதிபதியாக தெரிவான ரணில் விக்கிரமசிங்கவுக்கு கோட்டாபய தனது ஆதரவு எம். பிக்கள் மூலமாக பேராதரவை வழங்கி வருகிறார். இந்தப் பேராதரவுக்கு பதிலாக அவருக்கு அமெரிக்க தூதுவர் பதவியை வழங்கக் கோரப்படுவதாகக் கூறப்பட்டது. ஆனால், அவர் தொடர்பில் நற்சான்று பத்திரங்களை அமெரிக்க ஜனாதிபதி கோரும்போது நிராகரிக்கப்பட வாய்ப்பு இருப்பதால் பின்னர் அதுகைவிடப்பட்டது.

இந்நிலையில், ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தர பிரதிநிதி பதவியை அவருக்கு வழங்குமாறும் இதன் மூலம் அவர் மீண்டும் அமெரிக்கா செல்ல முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த யோசனையை பஸில் ராஜபக்ஷவே முன்வைத்தார் என்றும்கூறப்படுகிறது. இந்நிலையில், அடுத்தடுத்து ஜனாதிபதிக்கு வழங்கப்படும் ஆதரவும், முன் னெடுக்கப்படும் திட்டங்களும் விரைவில் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஐ.நா. நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பதவியை வழங்க வைக்கும் என்று அரச தரப்பின் உயர்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன

தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring

(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12
கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி.இளஞ்செழியன்
Tel: 416-524-0424

# இனப்பிரச்சனைக்குத் தீர்வு வழங்குவதாக ரணில் குறிப்பிட்டுள்ளதை சந்தேகக் கண் கொண்டே நோக்குவோம்

தமிழர் இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்குவதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளதை சந்தேக கண் கொண்டு நோக்குவோம். ஏனெனில் அவர் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை.

குறிப்பிடுவதொன்று, செய்வது பிறிதொன்று. அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தம் வெறும் கண் துடைப்பாக காணப்படுகிறது என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் 22 நவம்பர் 2022 செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தின் ஏழாம் நாள் விவாதத்தின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதியமைச்சர் என்ற அடிப்படையில் வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்துள்ளமைக்கு ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்கிறேன்.

2010ஆம் ஆண்டு முதல் இந்த ஆட்சேபனையை தெரிவித்துள்ளேன். பாராளுமன்ற உறுப்பினர் அல்லாத ஒருவர் வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கும் போது பாராளுமன்றத்தின் பொது நிர்வாக அதிகாரம் கேள்விக்குள்ளாக்கப்படும்.

148 ஆவது அத்தியாயத்தின் பிரகாரம் பாராளுமன்றத்தின் நிதி அதிகாரம் தற்போது முழுமைப்படுத்தப்பட்டுள்ளதா என்ற கேள்வி எழுந்துள்ளது. அரசியலமைப்பின் 21ஆவது திருத்தம் தொடர்பில் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் ஏதும் நிறைவேற்றப்படவில்லை.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்த எவ்வித அவதானமும் செலுத்தப்படவில்லை.

அரசியலமைப்பிற்கு அப்பாற்பட்டு ஜனாதிபதி எத்தனை அமைச்சுக்களையும் தன்வசம் வைத்துக் கொள்ளலாம் என்ற நிலை காணப்படுகிறது.





சுயாதீன ஆணைக்குழுக்களின் செயற்பாடுகள் தொடர்பில் தற்போது கேள்வி எழுந்துள்ளது. நாட்டின் பொருளாதாரத்தை இல்லாதொழித்து நாட்டை விட்டு சென்று மீண்டும் நாட்டுக்கு வந்த நபரை தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் நேரில் சென்று தலைவணங்கி வரவேற்கிறார். இவ்வாறான செயற்பாடுகள் தான் ஆணைக்குழுக்களின் சுயாதீனத் தன்மையை மலினப்படுத்துகிறது.

காணாமல் போனோர் தொடர்பில் ஆராயும் அதிகாரம் காணாமலாக்கப்பட்டோர் அலுவலகத்திற்கு அரசியலமைப்பின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் காணாமலாக்கப்பட்டோர் அலுவலகத்தின் தலைவர் ஒரு சிலர் மாத்திரமே காணாமல் போயுள்ளார்கள், ஏனையோர் வெளிநாடுகளில் வாழ்கிறார்கள் என பொறுப்பற்ற வகையில் கருத்துரைத்துள்ளமை வெறுக்கத்தக்கதாகும். இவர் தொடர்பில் அவதானம் செலுத்துமாறு நீதியமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளோம்.

நாட்டு மக்களின் எதிர்பார்ப்பிற்கமைய நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்பின் 21ஆவது திருத்தச்சட்டம் வெறும் கண்துடைப்பாகவே காணப்படுகிறது.

அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் வழங்கிய வாக்குறுதியை ஜனாதிபதி நிறைவேற்றவில்லை.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்தன வலது பக்கம் திரும்புதாக குறிப்பிட்டுக் கொண்டு இடதுப் பக்கம் திரும்புவாராம், அவரது கொள்கையை தற்போதைய ஜனாதிபதி கொண்டுள்ளார். குறிப்பிடுவது ஒன்று செய்வது பிறிதொன்று, வழங்கிய வாக்குறுதிகளுக்கு எதிராகவே ஜனாதிபதி செயற்படுகிறார்.

நாடு பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் பாதுகாப்பு அமைச்சுக்கு கடந்த இரண்டு வருடங்களை காட்டிலும் இந்த முறை பாதுகாப்பு அமைச்சுக்கு 12 சதவீதமளவில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இராணுவத்தை திருப்திப்படுத்துவதற்காகவும், அரசாங்கத்திற்கு எதிரான மாற்றுக் கொள்கை உடையவர்களை அடக்குவதற்காகவும் பாதுகாப்பு அமைச்சுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.ஆனால் நாட்டில் 70சதவீதமானோர் ஒருவேளை உணவை தான் உட்கொள்கிறார்கள், 50 ஆயிரத்திற்கும் அதிகமான பிள்ளைகள் மந்தபோசனை குறைப்பாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழர் இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்குவதாக கடந்த நாட்களில் குறிப்பிட்டுள்ளதை சந்தேக கண் கொண்டு நோக்குவோம்.ஏனெனில் இவர் இதுவரை வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றவில்லை என்றார்.

# தமிழறிஞர் ஔவை நடராசன் காலமானார்

தஞ்சை தமிழ் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் முன்னாள் துணைத் தலைவரும் தமிழறிஞருமான ஔவை நடராசன் காலமானார். அவருக்கு வயது 86.


சென்னையில் வசித்து வந்த ஔவை நடராசன் பல ஆண்டு காலமாகவே நீரிழிவு நோய்க்கு சிகிச்சை எடுத்து வந்த நிலையில் கடந்த சில மாதங்களாக அவருடைய உடல்நிலை மோசமடைந்திருந்தது. இரு நாட்களுக்கு முன்பாக உடல்நிலை மேலும் மோசமடைந்த நிலையில், அவர் தனியார் மருத்துவமனை ஒன்றில் சேர்க்கப்பட்டிருந்தார். உடல்நிலை தொடர்ந்து பின்னடைவைச் சந்தித்து வந்த நிலையில் 21 நவம்பர் 2022. இந்திய நேரப்படிமாலை ஏழே முக்கால் மணியளவில் அவர் உயிரிழந்தார்.

1936ஆம் ஆண்டு ஏப்ரல் 24ஆம் தேதி திருவண்ணாமலை மாவட்டத்தில் ஔவை துரைசாமி – லோகாம்பாள் இணையருக்கு மகனாகப் பிறந்தார். புகழ் பெற்ற தமிழறிஞரான இவருடைய தந்தையார் செய்யாறில் உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றி வந்த போது இவர் பிறந்தார்.

மதுரை தியாகராசர் கல்லூரியில் தமிழில் முதுகலைப் பட்டம் பெற்ற நடராசன், சென்னை பச்சையப்பன் கல்லூரியில் ஆய்வியல் நிறைஞர் பட்டத்தையும் பிறகு முனைவர் பட்டத்தையும் பெற்றார்.

பிறகு மதுரை தியாகராசர் கல்லூரி, தஞ்சை சரபோஜி கல்லூரி ஆகியவற்றில் பணி புரிந்தார். பிறகு அகில இந்திய வானொலியில் அறிவிப்பாளராக இருந்த நடராசனை, அப்போதைய தமிழ்நாடு முதலமைச்சர் எம்.ஜி. ராமச்சந்திரன் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் இணை இயக்குநராக நியமித்தார்.

இதற்குப் பிறகு தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறையின் செயலராக நடராசன் நியமிக்கப்பட்டு எட்டு ஆண்டுகள் பணி புரிந்தார். ஐ.ஏ.எஸ். அதிகாரி அல்லாத ஒருவர் இப்படி



செயலர் பணியில் நியமிக்கப்பட்டது அதுவே முதல்முறை.

1992இல் தஞ்சை தமிழ் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக நியமிக்கப்பட்டார் நடராசன். 2014ஆம் ஆண்டில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் துணைத் தலைவராக அவர் நியமிக்கப்பட்டார். 2014ஆம் ஆண்டு பிப்ரவரியில் அந்த ப்பதவியில் நியமிக்கப்பட்ட அவர், நவம்பர் மாதமே அந்தப் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டது சர்ச்சையை ஏற்படுத்தியது.

வாழ்விக்க வந்த வள்ளலார், பேரறிஞர் அண்ணா, கம்பர் காட்சி, கம்பர் விருந்து, திருப்பாவை விளக்கம், திருவெம்பாவை விளக்கம், சங்க இலக்கிய பெண்பாற் புலவர்கள் உள்ளிட்ட பல நூல்களை நடராசன் எழுதியுள்ளார்.

மறைந்த முதலமைச்சர் எம்.ஜி. ராமச்சந்திரனுக்கு மிக நெருக்கமானவராக அறியப்பட்ட ஔவை நடராசன், மதுரையில் 1982ல் நடைபெற்ற ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டின் பொதுச் செயலாளராகவும் செயல்பட்டார்.

தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் கலைமாமணி விருது, இந்திய அரசால் வழங்கப்படும் பத்ம ஸ்ரீ விருது உள்ளிட்ட விருதுகளை இவர் பெற்றிருக்கிறார். இவருடைய பெயருக்குப் முன்னால் உள்ள 'ஔவை' என்பது இவருடைய தந்தையார் பிறந்த ஊரான விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள ஔவையார் குப்பத்தைக் குறிக்கும். என்பது குறிப்பிடத்தக்கது.

# ராஜீவ்காந்தி கொலை வழக்கில் விடுவிக்கப்பட்ட இலங்கையர்களை நாடு கடத்த முடிவு




இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட வழக்கில் 30 வருட சிறைத் தண்டனையை அனுபவித்த பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ள இலங்கையர்களை நாடு கடத்துவதற்கான ஏற்பாடுகளை இந்திய தரப்புக்கள் முன்னெடுத்து வருகின்றன. ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 4 இலங்கையர்கள் உட்பட ஆறு பேர் இந்திய சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். அவர்களை கடந்த 11ம் இந்திய உயர்நீதிமன்றம் விடுவித்தது. விடுதலை செய்யப்பட்ட இலங்கையர்கள், இன்னமும் நாடு கடத்தப்படாத நிலையில், அகதிகள் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். 4 பேரையும் நாடு கடத்துவது, இலங்கை அதிகாரிகளிடம் இருந்து பயண ஆவணங்கள் பெறுவதை பொறுத்தே அமையும் என திருச்சி மாவட்ட ஆட்சியர் எம்.பிரதீப் குமார் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தியா தமிழகம் இராமநாதபுரம் மண்டபம் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமின் தனித்துணை ஆட்சியாளர், அடிப்படை வசதிகள் செய்து தரவில்லை என குற்றச்சாட்டி அவரை உடனடியாக பணியிட மாற்றம் செய்ய கோரி முகாமில் உள்ளவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இலங்கை தமிழர்களின் கோரிக்கைகளை ஏற்று தனித்துணை ஆட்சியர் மீது மாவட்ட ஆட்சியர் உரிய நடவடிக்கை எடுப்பதாக அதிகாரிகள் உறுதி அளித்ததன் பெயரில் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

# மாவீரர் பட்டியலில் "கஜேந்திரன்"களின் இடைச் செருக்கலுக்கு இடமில்லை அதி மூத்த விடுதலைப்புலிப் போராளி பசீர் காக்கா தெரிவிப்பு!



தமிழீழ மாவீரர் பணிமனையினால் வெளியிடப்பட்ட மாவீரர் பட்டியலில் உள்ளோரையும், 2009 மே 15 இற்கு பின்னர் வெளியுலகத்துக்குத் தகவல் தெரிவிக்க முடியாத களச்சூழலில் வீரச்சாவடைந்த புலிகள் இயக்கப் போராளிகளையும் தவிர வேறெவரையும் இடைச்செருகலாக இணைத்து மாவீரர்களின் புகழுக்குக் களங்கம் ஏற்படுத்த வேண்டாம் என மாவீரர் அறிவிழியின் தந்தையும் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அதிமூத்த போராளியுமான பசீர் காக்கா என்று அழைக்கப்படும் முத்துக்குமார் மனோகர் ஆகிய நான் சகல தரப்பினருக்கும் வேண்டுகோள் விடுக்கிறேன் என ஊடகங்களுக்கு அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும், அப்படி வேறு யாரையாவது நினைவு கூர வேண்டுமென வலியுறுத்தும் தரப்புகள் தங்கள் கட்சியின் நிறுவனர்களின் நினைவு நாளிலோ, பிறந்த நாளிலோ தனியாக நினைவு கூருவதற்கு உள்ள உரிமை பற்றி எவரும் ஆட்சேபனை தெரிவிக்க மாட்டார்கள் எனக் கருதுகிறேன்.

தங்கள் கட்சியின் எதிர்காலம் குறித்த கலந்துரையாடலின் முடிவில் ஏகமனதாகத் தாங்கள் எடுத்த முடிவு குறித்து சைக்கிள் சின்னத்துடன் தேர்தல் ஆணையத்தில் அகில இலங்கைத்தமிழ் காங்கிரஸ் கட்சி என்று தம்மை அடையாளப்படுத்தும் தரப்பின் தலைவர் கஜேந்திரகுமார் தெரிவிக்கும் கருத்துக்களை காணொலி மூலம் அண்மைய நாட்களில் காணக்கூடியதாக இருந்தது. இதில் ஏனைய தரப்பினர் அனைவரையும் மாவீரர் நாளில் நினைவுகூர வேண்டுமென தாங்கள் முடிவெடுத்திருப்பதாக அவர் குறிப்பிடுகிறார். உலகில் ஒழுக்கத்திற்கு உதாரணமான அமைப்பாகக் குறிப்பிடப்படுவது விடுதலைப் புலிகளைத் தான். புகைத்தல் உட்பட போதைப்பொருள் பாவனை மது போன்ற விடயங்களில் கண்டிப்பாக இருப்பது புலிகளின் வரலாறு. அவர்களின் ஒழுக்கம், தலைமைக்குக் கட்டுப்படல் போன்ற விடயங்கள் உலகறிந்தது. அவ்வாறு இருக்கையில் ஏனையவர்களை இந்தப் பட்டியலில் இணைக்க முயல்வது விடுதலைப் போராட்டத்தின் அரிச்சுவடியைக் கூட இவர்கள் கற்கமுனையவில்லை என்பதை எடுத்துக் காட்டுகிறது.

புலிகளைத் தவிர ஈரோஸ் இயக்கத்தவர் 266 பேரும், தனிக்குழுவாக பத்துப் பேரும் தமிழீழ மாவீரர் பணிமனையின் மாவீரர் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர். தனிக்குழுவில் பொன்.சிவகுமாரன் (05யூன்1974) யாழ், பெஞ்சமின் (01ஜனவரி1981) மட்டக்களப்பு, தங்கத்துரை (நடராசா தங்கவேல் - தொண்டைமானாறு, யாழ்) (25யூலை1983), குட்டிமணி (செல்வராசா யோகச்சந்திரன். வல்வெட்டித்துறை) (25யூலை1983), கணேசானந்தன் ஜெகநாதன் (தொண்டமானாறு.யாழ் (25யூலை1983), செனட்டர் (வைத்தியலிங்கம்நடேசதாசன், வல்வெட்டித்துறை (25யூலை1983), தேவன் - வெள்ளைமாமா (செல்லத்துரை சிவசுப்பிரமணியம் - அச்சுவேலி யாழ்) (25யூலை1983), சிவபாதம் மாஸ்டர் (நவரத்தினம் சிவபாதம் பத்தைமேனி அச்சுவேலி யாழ்) (25யூலை1983) சிறிகுமார் (முத்துக்குமார் சிவகுமார் உரும்பிராய் கிழக்கு யாழ்) (27யூலை 1983), ஜெகன் - நிசான் ( நடராசா ஜெகதீசன் சங்கரத்தை வட்டுக் கோட்டை, யாழ்.) (09செப்1984) ஆகியோரே இந்தப் பத்து மாவீரரும் ஆவார்.

செருப்புக்கு அளவாக காலை வெட்ட வேண்டும் என்ற பாணியில் கஜேந்திரகுமார் சொல்லும் விடயங்களின் உள்நோக்கத்தைப் பார்த்தால் பதின்மூன்றாவது சட்டத் திருத்தத்திற்கு ஆதரவான நிலைப்பாடு கொண்டுள்ள இயக்கங்கள் கட்சிகளுக்கு நேசக்கரம் நீட்டுவதை உணர முடிகிறது.

தலைவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கும் சூழல் அன்றைய கால அரசியல் நிலைமைகளினால் உருவானது. போராட்ட ஆதரவாளர் குடும்பங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள், கூட்டுப்பாலியல் வல்லுறவும் கொலையும் என எல்லாவற்றையும் தெரிந்து கொண்டு தான் தமிழ்த்தரப்பின் ஐக்கியத்திற்காக உச்சக்கட்ட விட்டுக் கொடுப்புடன் நடந்து கொண்டார். அதற்காக மாவீரர் பட்டியலில் அவர்களை இணைக்கத் தயாராக இருக்கவில்லை. எமது பட்டியலில் உள்ள பலரை மாவீரர் ஆக்கியதே இவர்கள் தான் என்று தெரிந்து கொண்டும் இம்முயற்சியில் இறங்கினார். எனினும், இரு இயக்கங்களிலும் தலா ஒவ்வொருவரை எக்காலத்திலும் இவர்களின் இயக்கங்களில் மீண்டும் இணைக்கக் கூடாது என வலியுறுத்தப்பட்டது.

2009இற்கு பின்னரான சூழலில் அவர்களை மீண்டும் தங்கள் கட்சியில் இணைத்துக் கொண்டன அந்த இயக்கங்கள். 2004 தேர்தலில் கூட்டமைப்பின் சார்பில் 22 பேர் பாராளுமன்றத்துக்குத் தெரிவாகினர். இவர்கள் தலைவரைச் சந்தித்தனர். அவ்வேளை மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினரான அரியநேத்திரன் கருணாவின் பிளவின் போது அந்தத் தரப்பிலிருந்து வெளியேற முடியாத நிலையிலிருந்த போராளிகள் பின்னர் நடைபெற்ற மோதலில் கொல்லப்பட்டனர் இவர்களையும் மாவீரர் பட்டியலில் இணைக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார். இந்த 22 பேரிலும் தானே இயக்கத்தின் அதி விசுவாசியென காட்ட முந்திரிக் கொட்டைத்தனமாகச் செயற்பட்டார் கஜேந்திரன். இயக்கத்தைப் பொறுத்தவரை யார் யாரை மாவீரர் பட்டியலில் இணைப்பது(20ம்பக்கம்)


# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224,** Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



யாழ்.நகரில் இருந்து

ஈழநாட்டிற்காக - பகிரதன் -

எம்மவரால் தயாரிக்கப்பட்ட திரைப்படங்கள் என்றால், அதனையிட்டு பெரிதாக எதிர் பார்க்க எதுவும் இருக்காது என்ற ஒரு கருத்து பொதுவாக எம்மவரிடையே உள்ளது. அது ஒரு நாடக பாணியில் இருக்கும். கலையோ, கதையோ மக்களைக் கவர்வதாக இருக்காது என்ற எண்ணத்தில் தான் பலர் இருக்கின்றார்கள். ஆனால், யாழ்ப்பாணத்தில் பிரபல மருத்துவர் வைத்திய கலாநிதி சிவன் சுதனின் தயாரிப்பில் உருவான தூவானம் என்ற முழு நீள திரைப்படத்தை சில தினங்களுக்கு முன்னர் பார்த்த போது, அந்தக் கருத்து எவ்வளவுக்கு தவறானது என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது.

தமிழ் மக்களின் வாழ்வியலை, வாழ்வியல் பிரச்சினைகளை சுவாரஸ்யமான கதை ஒன்றின் பின்னணியில் சிறப்பாகச் சித்தரித்திருப்பதோடு, தாயகத்தின்

கின்றது. அது கோடம்பாக்கத்தின் பிரமாண்டங்களையும் தாண்டி நிற்கின்றது.

அதற்கிடையே பல கதைகள் வருகின்றன. பல செய்திகள் சொல்லப்படுகின்றன. கதையோட்டத்துக்கு ஏற்றவகையில்

ஆக்கத்துக்குத் தோள் கொடுத்திருக்கிறார் வைத்திய கலாநிதி சா.சிவயோகன். பாடல்கள் அனைத்துமோ சிறப்பாகவும்




ஈழத்தில் பல திரைப்படங்கள் வெளி

தாயகத்தின் பல பகுதிகள் வருகின்றன. ட்ரோன் கமராக்கள் பயன்படுத்தப்பட்டு

பார்வையாளர்களை ஒன்றிப் போகச் செய்யும் வகையிலும் அமைந்திருந்தன.

இந்தத் திரைப்படத்தைத் தயாரித்திருப்பவர் மிகவும் பிரபலமான ஒரு மருத்துவர் சமூக அக்கறையுடன் பல விடயங்களை முன்னெடுத்து வருபவர் திரைப்படத்துக்கான மூலக் கதையும் அவர் தான். திரைக்கதை வசனத்தையும் அவரே எழுதியிருக்கின்றார். ஒரு கவிஞராகவும் அறியப்பட்ட அவர் இதற்கான பாடல்களையும் சிறப்பாக எழுதியிருக்கின்றார். ஏற்கனவே நித்திலம் என்ற பெயரில் யு ரியுப் சனல் ஒன்றையும் நடத்திக்கொண்டிருக்கும் அவர் இந்தத்திரைப்படத்தையும் நித்திலம் தயாரிப்பாகவே வெளியிட்டிருக்கின்றார்..

சமூகப் பொறுப்புடன் நித்திலம் என்ற யு - ரியுப் சனல் மூலமாக மக்களுக்குப்

# யாழ்.நகரில் வீதியெங்கும் இராணுவம்

அழகையும் வளங்களையும் கண்முன் கொண்டு வந்து அனைவரையும் சிந்திக்க வைத்திருக்கின்றது ''தூவானம்''. ஒன்றரை மணிநேரத்துக்கு சற்று அதிகமாகச் செல்லும் இந்தத் திரைப்படம் எம்மையே எம் முன் கொண்டு வந்திருக்கின்றது என்று சொல்லலாம். திரைப்படம் முடிந்து செல்லும் போது அருமையான திரைப்படம் ஒன்றைப் பார்த்தோம் என்ற திருப்தி அனைவரிடமும் எழுகின்றது.

யாழ். நகரில் திரைப்பட விமர்சகர்கள், பத்திரிகையாளர்களுக்காக தூவானம் திரைப்படத்தின் விஷேட காட்சி ஒன்றையும், அது தொடர்பான கருத்துப் பகிர்வு ஒன்றையும் வைத்திய கலாநிதி சிவன் சுதன் அண்மையில் ஏற்பாடு செய்திருந்தார். எமது ஒவ்வொருவர் வாழ்க்கையுடனும் பின்னிப் பிணைந்த கதை ஒன்றை அடிபபடையாகக் கொண்ட இந்தத் திரைப்படம், இந்தளவுக்கு சிறப்பாகத் தயாரிக்கப்பட்டிருக்கும் என்பதை அறியாமலேயே அங்கு நாம் சென்றிருந்தோம்.

தூவானம் திரையிடப்படுவதற்கு முன்ன

வந்திருக்கின்றன. வர்த்தக ரீதியில் அவை பெருமளவு வெற்றி பெறாத போதிலும், ரசிகர்களை எந்தளவுக்குக் கவர்ந்தன, திரைப்படத்தின் மூலமாக சொல்லப்பட்ட செய்தி எந்தளவுக்கு மக்களைச் சென்றடைந்தது போன்ற கேள்விகள் உள்ளன. ஆனால், தூவானம் நிச்சயமாக மக்களைக் கவரக்கூடிய ஒன்றாகவும், பல செய்திகளை பார்வையாளர்களுக்குக் கொடுக்கக் கூடியதாகவும் அமைந்திருப்பது அதன் சிறப்பு.

பல இடங்கள் பருந்துப் பார்வையாகவும் காட்டப்படுகின்றது. ஆனால், அவை அனைத்தும் கதையோட்டத்துக்கு ஏற்றவாறு கொண்டு செல்லப்படுவது சிறப்பானதாக இருக்கின்றது. புலம் பெயர்ந்த மக்களுக்கும், தாயகத்திலுள்ள தமிழர்களுக்கும் இந்தத் திரைப்படத்தின் மூலமாக பல செய்திகள் சொல்லப்பட்டுள்ளன. பல தகவல்கள் திரைப்படத்தின் கதையோட்டத்தைப் பாதிக்காத வகையில் குறியீடாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. குறிப்பாக புலம்பெயர்ந்த

# இது நம்ம யாழ்ப்பாணம் 7

போர் தீவிரமாக இடம்பெற்றுக் கொண்டிருந்த காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து புலம் பெயர்ந்து வெளிநாட்டுக்குச் சென்ற ஒரு இளைஞர், குடும்பஸ்தராக தனது இரண்டு பிள்ளைகளுடன் தாயகத்துக்குத் திரும்புகின்றார். போரின் போது இடம்

மக்களுக்குள்ள பொறுப்புக்கள், தாயகத்தில் வெளிநாட்டுக் கனவுகளுடன் வாழ்பவர்கள் செய்யக்கூடியவை. தாயகத்தின் பொருளாதாரத்துக்கான வாய்ப்புக்கள், இளைஞர்களின் எதிர்பார்ப்புக்கள் என பல விடயங்களை இந்தத் திரைப்படம் கையாண்டுள்ளது. பல இடங்கள் பார்வையாளர்களைக் கண்கலங்கச் செய்கின்றன.

ஆனால், திரைப்படத்தின் விறுவிறுப்பான கதையோட்டத்துக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் இந்த விடயங்களைச் சொல்வதில் இயக்குனர் வெற்றி பெற்றிருக்கின்றார். கலாநிதி க.ரதிதரன் இந்தப்படத்தை இயக்கியிருக்கின்றார்.. இத்துறையில் அவருக்குள்ள அனுபவம் அவருக்குக் கைகொடுத்திருக்கின்றது.

வைத்தியர் சிவன் சுதனின் பாடல்களுக்கு இசைவாணர் கண்ணன், முரளி, சாயிதர்ஷன் ஆகியோர் இசை வழங்கியிருக்கிறார்கள். இசைவாணர் கண்ணன், ரொபேட், கோகுலன், தயாபரன், மோகன், மேரி மடோனா, கில்மிசா, தானியா, பிரணா ஆகியோர் சுவைபட பாடல்களைப் பாடியிருக்கிறார்கள்.

பயனுள்ள பல செய்திகளைக் கொண்டு வந்து சேர்க்கும் மருத்துவர் தூவானம் திரைப்படத்தின் மூலமாகவும் தாயக மக்களுக்கும், புலம்பெயர்ந்த மக்களுக்கும் தூவானத்தின் மூலமாக முக்கியமான பல செய்திகளைச் சொல்கின்றார்.. இதுதான் அவரது முதலாவது முழு நிள திரைப்படம் என்பதை நம்ப முடியவில்லை.

அதே வேளையில், இத்திரைப்படத்தில் சம்பந்தப்பட்ட மற்றவர்களும் தமது பொறுப்பை உணர்ந்து குழுவாக செயற்பட்டிருக்கின்றார்கள். தூவானம் குழுவினரின் அர்ப்பணிப்பான பணிக்குக் கிடைத்துள்ள ஒரு வெற்றியதக இதனைக் கருதலாம்.

விரைவில் திரைக்கு வரவுள்ள தூவானத்துக்கு தாயக மக்களும், புலம்பெயர்ந்த உறவுகளும் சிறப்பான வரவேற்பைக் கொடுப்பார்கள் என நிச்சயமாக எதிர் பார்க்கலாம். அதன் மூலமாக நித்திலம் குழுவினர் இது போன்ற மேம்பல கலைப் படைப்புக்களை தருவதை ஊக்குவிக்கவும் முடியும்.




தாக அறிமுக உரை ஒன்றை நிகழ்த்திய வைத்திய கலாநிதி, ஒரு விடயத்தை சொன்னார். தென்னிந்தியாவில் தயாரிக்கப்படும் திரைப்படங்களோடு ஒப்பிடும் போது நாம் ஆரம்ப நிலையில் தான் நிற்கிறோம். அவற்றுடன் இதனை (தூவானத்தை) ஒப்பிட முடியாது என்று அவர் கூறியிருந்தார். ஆனால், திரைப்படத்தை பார்த்த போது கோடம்பாக்கத்துடன் ஒப்பிடும் போது, துவானம் பல மடங்கு சிறப்பாகவே இருந்தது.

கோடம்பாக்கத்தின் பிரமாண்டங்கள் இல்லாத போதிலும், கைதேர்ந்த எம் நாட்டுக் கலைர்கள் ஒன்றிணைந்து சிறப்பான முறையில் இதனைத் தயாரித்துள்ளார்கள். தம்மிடமுள்ள வளங்களை அவர்கள் எந்தளவுக்குச் சிறப்பாக கையாண்டுள்ளார்கள் என்பதை திரைப்படததை பார்க்கும் போது அறிய முடி

பெயரும் போது, அவசரமாக ஒரு பொருளை புதைத்து வைக்குமாறு தனது நண்பர் ஒருவரிடம் கொடுத்து விட்டே சென்றிருக்கின்றார். அந்தப் பொருளை தேடி எடுப்பதற்கான முயற்சிகளை அவர் தாயகம் திரும்பிய பின்னர் மேற்கொள்கின்றார்.

குறிப்பிட்ட பொருள் வைக்கப்பட்ட இடத்தைத் தெரிந்தவர்கள் இருவர் மட்டும் தான். அதில் ஒருவர் மரணித்து விட, மற்றொருவரை தேடுகின்றார். புதைத்து வைத்த அந்த பொருளை அவரால் கண்டு பிடிக்க முடிகின்றதா? புதைத்து வைத்த அந்தப் பொருள் என்ன? என்ற கேள்வியும் தான் திரைப்படத்தை பரபரப்பாகக் கொண்டு செல்கின்றது. அதனை அறிவதற்கான ஆர்வத்தை ரசிகர்களிடம் தூண்டும் வகையில் திரைப்படத்தை சிறப்பாகத் தயாரித்துள்ளார்கள்.

உங்கள் அபிமான ஈழநாடு

பத்திரிகையின்

30வது ஆண்டு விழா:-

23 ஏப்ரல் 2023

“சங்கீத சங்கமம் 2023”

# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

# உறவுகளே! நவம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக. தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும்.

ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

12 நவம்பர் 2022 முதல் 18 நவம்பர் 2022 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கமலம்மா கனகசபை

அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டி ருந்த திருமதி கமலம்மா கனகசபை அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 17 நவம்பர் 2022 வியாழக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தை களுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி கமலம்மா கனகசபை அவர்களது ஆத்மா சாந்தி யடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் நண்பர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 8வது ஆண்டு நினைவஞ்சலி



### Dr ஜெயதேவி முத்துலிங்கசுவாமி

கொழும்பைப் பிறப்பிடமாகவும் லண்டனை வாழ்விடமாகவும் கொண்டிருந்த டாக்டர் ஜெயதேவி முத்துலிங்கசுவாமி அவர்களது எட்டாவது ஆண்டு நினைவு நாள் 30 நவம்பர் 2020 புதன்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்குகின்றார்கள். டாக்டர் ஜெயதேவி முத்துலிங்கசுவாமி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 5வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி புஸ்பராணி இராமச்சந்திரன்

பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி புஸ்பராணி இராமச்சந்திரன் அவர்களது ஐந்தாவது ஆண்டு நினைவு நாள் 16 நவ 2022 புதன்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளு க்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி புஸ்பராணி இராமச்சந்திரன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் நண்பர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


சிவமயம்



ஸ்ரீ கைலாசம்

சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை

அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)

அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு

சைவக்குருக்களை

தொடர்பு கொள்ளவும்

"இணுவில் திருவூர்"

சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்

647.629.5468

msvkurukkal@gmail.com

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



17 நவம்பர் 2022 வியாழக்கிழமை அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி கமலம்மா கனகசபை அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



19 நவம்பர் 2022 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு விஜயரெத்தினம் சாந்தகுமார் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் திரு விஜயரெத்தினம் சாந்தகுமார் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



20 நவம்பர் 2022 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி மனோகரன் காந்தரூபி தம்பதிகளின் செல்வப்புதல்வி ஆரபியின் 16வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி ஆரபி தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



21 நவம்பர் 2022 திங்கட்கிழமை வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் அனுராதபுரம் யாழ்ப்பாண வீதியை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருக்கும் திருமதி யசோதராதேவி முத்துக்குமாரு அவர்களது 73வது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் திருமதி யசோதராதேவி முத்துக்குமாரு அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



22 நவம்பர் 2022 செவ்வாய்க்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



23 நவம்பர் 2022 புதன்கிழமை பகவான் சத்தியசாயிபாபாவின் அவதார நன்நாளை முன்னிட்டு திரு அரிஅரதாசன் அவர்கள் (கனடா) உபயமாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.







# ரணில் ஒரு நரி! தந்திரம் செய்வார்!

ரணில்- ராஜபக்ச அரசாங்கம் இனப் பிரச்சினைக்கான தீர்வைக் காணும் நோக்கத்தோடு தமிழ்க் கட்சிகளோடு பேசப் போவதாக கடந்த வாரம் அறிவித்திருக்கிறது. பன்னாட்டு நாணய நிதியத்தை திருப்திப்படுத்துவதற்கும் ஐநாவை சமாளிப்பதற்கும் இது போன்ற அறிவிப்புகள் தேவை. அல்லது தமிழ் மக்களின் தலையில் ஏதாவது ஒரு அரைகுறைத் தீர்வை கட்டி விடுவதற்கு இது உகந்த தருணம் என்று ரணில் சிந்திக்கிறாரா?

ஏனெனில் 2015ஆம் ஆண்டில் ரணில் மைத்திரி அரசாங்கம் நிலைமாறு கால நீதிச் செய்முறைகளின் கீழ் இனப்பிரச்சினைக்கான தீர்வையும் உள்ளடக்கிய ஒரு புதிய யாப்பை உருவாக்க முற்பட்டது. அந்த யாப்புருவாக்கச் செய்முறைகள் இடைக்கால வரைபுவரை முன்னேறின. ஆனால் இடையே மைத்திரிபால சிறிசேன ஆட்சியைக் குழப்பினார். அதனால் யாப்புருவாக்க முயற்சிகள் இடையில் நின்று போயின.

அதன்பின் ஆட்சிக்கு வந்த கோத்தாபய ஒரு புதிய யாப்பை உருவாக்கப் போவதாக கூறிக்கொண்டு ஒரு நிபுணர் குழுவை உருவாக்கினர். இப்பொழுது ரணில் மீண்டும் வந்து விட்டார் அவர் 2018 இல் விட்ட இடத்திலிருந்து ஒரு புதிய யாப்பை உருவாக்கும் முயற்சியை தொடங்கப் போகிறாரா? அல்லது அதே பழைய முயற்சிக்கு ஒரு புதிய லேபலை ஒட்டி அதைத் தொடரப் போகிறாரா? அல்லது முற்றிலும் புதிதாக ஒரு முயற்சியை தொடங்கப் போகிறாரா? அல்லது பன்னாட்டு நாணய நிதியம் ஐநா போன்றவற்றைத் திசை திருப்புவதற்குத் தமிழ் மக்களையும் பங்காளிகளாக்கும் ஒரு தந்திரமா? என்ற கேள்விகளை தமக்குள் எழுப்பி தமிழ்த் தரப்பு ரணிலை எதிர் கொள்ள வேண்டும்.

அவ்வாறு தமிழ்த் தரப்பு ரணிலை எதிர் கொள்வதற்காக தங்களுக்கிடையே கலந்து பேசி ஒருமித்த கருத்தை எட்ட வேண்டும் என்று கூறி கடந்த வாரம் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் ஏனைய கட்சித் தலைவர்களுக்கு ஒரு மின்னஞ்சலை அனுப்பியிருந்தார். அதில் அவர் சமஸ்டி தான் தமிழ் மக்கள் கேட்கும் தீர்வு என்ற அடிப்படையில் அனைத்துக் கட்சிகளும் ஒன்றாக இணைந்து அந்தக் கோரிக்கையை முன் வைக்க வேண்டும் என்று கேட்டிருந்தார்.

ஆனால் அது தொடர்பில் அவர் தனது சொந்தக் கட்சியான தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களோடு கூட உரையாடவில்லை என்று குற்றம் சாட்டப்படுகிறது. அவருடைய அழைப்பை, கூட்டமைப்பில் உள்ள பங்காளி கட்சிகள் பொருட்படுத்தவில்லை. கூட்டமைப்புக்கு வெளியே உள்ள கட்சிகளும் அந்த அழைப்பை பொருட்படுத்தவில்லை. சம்பந்தர் அழைத்தால் மேசைக்கு வரலாம் என்ற நிலைப்பாட்டை ஏனைய கட்சிகள் கொண்டிருப்பதாக தெரிகிறது.

இதனால் சுமந்திரனின் அழைப்பு வெற்றி பெறவில்லை. கடந்த செவ்வாய்க்கிழமை சம்மந்தனின் கொழும்பு இல்லத்தில் இடம் பெறவிருந்த அந்தச் சந்திப்பு ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அதாவது பேச்சுவார்த்தைக்கு முன்னோடியாக தமிழ்த் தரப்பு தங்களிடையே பேசவேண்டிய விடயங்கள் தொடர்பில் ஒருமித்த நிலைப்பாட்டை எடுப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு முயற்சி சறுக்கி விட்டது.

அப்படி ஒரு முயற்சி அவசியமானது. அதை கட்சிகள் தங்களுக்கிடையே தாங்களாக செய்ய வேண்டும். அல்லது குடிமக்கள் சமூகங்கள் அதை நோக்கி கட்சிகளை உந்தித்தள்ள வேண்டும்.ஏனென்றால் தமிழ்த்தரப்பு என்ன கேட்கின்றது என்பதனை ஒரே குரலில் சொன்னால் அதற்குப் பலம் அதிகம் என்று அபிப்பிராயம் பெரும்பாலான வெளிநாட்டுத் தூதரகங்கள் மத்தியில் உண்டு. தமிழ் குடிமக்கள் சமூகங்களை சந்திக்கும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் அதை வலியுறுத்திப் பேசுவதுண்டு. தமிழ்மக்கள் மத்தியில் இருக்கும் பிரதான பலவீனமாக அதைச் சுட்டிக்காட்டிப் பேசும் வெளி நாட்டுப் பிரதிநிதிகளும் உண்டு. இப்படிப்பட்டதோர் பின்னணியில் தமிழ்த்தரப்பு தான் எதைக் கேட்கிறது என்பதனை ஒரே



குரலில் முன்வைக்க வேண்டிய ஒரு கட்டாயத் தேவை உண்டு.

தமிழ் கட்சிகள் என்ன கேட்கின்றன? இதுவரையிலும் தமிழ்த் தரப்பு முன்வைத்த தீர்வு முன்மொழிவுகளை தொகுத்துப் பார்த்தால் ஒரு விடயம் மிகத் தெளிவாகத் தெரிகிறது. எல்லாத் தமிழ்த் தேசியக் கட்சிகளுமே.எல்லாக் குடிமக்கள் சமூகங்களுமே ஒற்றையாட்சியை நிராகரிக்கின்றன. அவை கூட்டாட்சிப் பண்புடைய -சமஸ்டிப் பண்புடைய தீர்வைத் தான் கேட்கின்றன.

இலங்கை இனப்பிரச்சினை வரலாற்றில் தமிழ்த் தரப்பு அதிகளவு தீர்வு முன்மொழிவுகளை முன் வைத்த ஒரு கால கட்டம் எதுவென்றால் கடந்த ஆறு ஆண்டு காலப் பகுதிதான் .2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 30-1 ஐநா தீர்மானத்தின் பிரகாரம் ரணில் விக்கிரமசிங்க நிலைமாறுகால நீதிச் செய்முறைகளின் கீழ் நாடாளுமன்றத்தை சாசனப் பேரவையாக மாற்றினார்.

அதாவது ஒரு புதிய யாப்பை உருவாக்கும் நோக்கத்தோடு நாடாளுமன்றம் சாசன பேரவையாக மாற்றப்பட்டது.அதிலிருந்து தொடங்கி கோத்தாபயவின் யாப்புருவாக்கத்திற்கான நிபுணர்குழு வரையிலும் தமிழ்த்தரப்பு தனது முன்மொழிவுகளை முன்வைத்து வருகிறது.இதில் தமிழ்க் கட்சிகள், தமிழ் குடிமக்கள் சமூகங்கள், தமிழ் மக்கள் பேரவை போன்ற மக்கள் அமைப்புக்கள், புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் அமைப்புகள் போன்ற பல்வேறு தரப்புகளும் கடந்த 6 ஆண்டு கால பகுதிக்குள் அதிகளவு முன்மொழிவுகளை வைத்திருக்கின்றன.

இதில் குறிப்பாக தமிழ் மக்கள் பேரவை முன்வைத்தது ஒரு சமஸ்ரி முன்மொழிவு. அது போலவே வட மாகாண சபை முன் வைத்ததும் ஒரு சமஸ்ரி முன்மொழிவு. விக்னேஸ்வரனின் கட்சி கொன் பெடரேஷனை கேட்கின்றது. அதுவும் உயர்வான ஒரு சமஸ்ரி தான்.த மிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒரு சமஸ்ரிக் கட்டமைப்பைக் கேட்கிறது.அரசாங்கம் ஒற்றை ஆட்சி முறைமையை மாற்றி கூட்டாட்சிக்குத் தயார் என்று அறிவித்தால் தாம் ரணிலுடன் பேசத்தயார் என்று அக்கட்சி கூறுகிறது.

இதில் கூட்டமைப்பு ரணிலோடு இணைந்து உருவாக்க முயன்ற யாப்பைக் குறித்து விமர்சனங்கள் உண்டு.தமிழ் மக்களின் பங்களிப்போடு முன்னெடுக்கப்படும் முதலாவது யாப்புருவாக்க முயற்சி அதுவென்று சம்பந்தர் சொன்னார். கூட்டமைப்பு அதை சமஸ்ரிப் பண்புடையது என்று கூறியது. ஆனால் ரணில் விக்கிரமசிங்கவும் அவருடைய அமைச்சர்களும் அது ஒற்றை ஆட்சி தான் என்று சொன்னார்கள்.

சம்பந்தர் ‘‘ரிக்கப்படமுடியாத, பிளவுபடாத இலங்கைத் தீவு’’ என்று திரும்பத் திரும்ப ஒரு மந்திரம் போல சொல்லிக் கொண்டிருந்தார். சமஸ்ரி என்று வெளிப்படையாக லேபலை ஒட்டினால் அதைச் சிங்கள மக்கள் எதிர்பார்கள் என்றும் காரணம் கூறப்பட்டது. அதாவது நடைமுறையில் அந்தத் தீர்வு முயற்சியை அவர்கள் சிங்கள மக்களுக்கு ஒற்றை ஆட்சி என்று வியாக்கியானம் செய்தார்கள். தமிழ் மக்களுக்கு அது கூட்டாட்சி என்று வியாக்கியானம் செய்தார்கள். ஆனால் இப்பொழுது சுமந்திரன் கூறுகிறார் ஒரு சமஸ்ரித் தீர்வை நோக்கி எல்லாக் கட்சிகளும் ஒரு குரலில் பேச வேண்டும் என்று.

அவர் ஏனைய கட்சித் தலைவர்களுக்கு அனுப்பிய மின்னஞ்சலில் கூறப்பட்டபடி சமஸ்ரிதான் தீர்வு என்பதனை தமிழரசுக் கட்சி உறுதியாகவும் வெளிப்படையாகவும் விட்டுக் கொடுப்பின்றியும் கூறுமாயிருந்தால் ஏனைய கட்சிகளும் அவர்களோடு இணைந்து ஒரே குரலில் அந்தக் கோரிக்கையை முன்வைக்கலாம். இதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இணைய மறுத்தால் அதுவும் நல்லதே. அக்கட்சி வெளியில் நின்று கொண்டு ஏனைய கட்சிகளை கண்காணித்துக் கொண்டிருக்கும். ஏனைய கட்சிகள் தமது கோரிக்கைகளில் இருந்து இறங்கினால் அவற்றை முன்னணி அம்பலப்படுத்தும். எனவே ஒரு கட்சி எதிர் நிலையில் நிற்பதும் நல்லது.

ரணில் இனப்பிரச்சினையை சர்வதேச மயநீக்கம் செய்ய முற்படுகிறார். வெளியாரின் தலையீடின்றி பிரச்சினையைத்



கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -

தீர்க்க வருமாறு தமிழர்களை அழைத்திருக்கிறார். போரில் வெல்வதற்கு அவர்களுக்கு வெளி நாடுகளின் ஆயுதமும் உதவிகளும் தேவை. ஆனால் சமாதானத்துக்கு அது தேவையில்லையாம். தமிழ்த் தரப்பு அதை ஏற்கக்கூடாது. இந்தியாவையும் உள்ளடக்கிய ஒரு மூன்றாவது தரப்பின் மத்தியஸ்தத்தைக் கேட்க வேண்டும்.அந்த மூன்றாவது தரப்பின் மத்தியஸ்தத்தின்கீழ் சிங்கள-தமிழ்-முஸ்லீம் மக்கள் கூட்டாட்சிக்கான ஓர் அரசியல் உடன்படிக்கையை எழுதுவதற்காகப் பேச வேண்டும்.

மேலும் இலங்கை அரசாங்கத்தை பிணை எடுக்க முயலும் ஐ.எம்.எப் போன்ற அனைத்துலக அமைப்புக்களிடம் இனப்பிரச்சினையைத் தீர்ப்பது என்பதை பொருளாதார பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரு முன்நிபந்தனையாக வைக்குமாறு நிர்பந்திக்க வேண்டும்

ரணில் இப்பொழுது நிறைவேற்று அதிகாரமுடைய ஒரு ஜனாதிபதி.தந்திரமும் நிறைவேற்று அதிகாரமும் ஒன்று சேர்ந்திருக்கின்றன.ரணில் ஒரு நரி.அவர் தந்திரங்கள் செய்வார் என்று தமிழ்த்தரப்பு தங்களுக்குள் புறுபுறுத்துக் கொண்டிருக்க முடியாது.தமிழ்மக்கள் தாங்களும் புத்திசாலிகள் என்பதனை நிரூபிக்க வேண்டிய ஆகப்பிந்திய தருணம் இது.



# ரணிலின் அழைப்பை தமிழ்த் தரப்புக்கள் எவ்வாறு கையாளப் போகின்றன?

**கட்டுரையாளர்:**
**ஈழநாட்டிற்காக கொழும்பில் இருந்து**
**- பார்த்தீபன் -**



பேச்சுவார்த்தை ஒன்றுக்கு வருமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்த அழைப்புக்கான பிரதிபலிப்பை எவ்வாறு வெளிப்படுத்துவது என்பதில் தமிழ்க் கட்சிகள் குழம்பிப் போயுள்ளன. தமிழ்க் கட்சிகளிடையிலான முரண்பாடுகளும், பொதுவான விடயங்களில் கூட இணக்கத்தை ஏற்படுத்த முடியாத நிலையும் இதனால் வெளிப்பட்டுள்ளது. இதன்மூலம் கிடைத்துள்ள நல்ல வாய்ப்பை மீண்டும் தமிழ்த் தரப்பு தவற விட்டு விடப் போகின்றதா என்ற கேள்வியை மக்கள் எழுப்புகின்றார்கள்.

நவம்பர் 10ஆம் திகதி பாராளுமன்றத்தில் உரையாற்றிய ஜனாதிபதி தமிழ் மக்களைப் பாதிக்கும் இரண்டு விடயங்கள் தொடர்பில் தான் குறிப்பிட்டிருந்தார். ஒன்று - அரசியல் கைதிகளின் விடுதலை. இரண்டு காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம். இந்தப் பிரச்சினைகளுக்கு அடுத்த சுதந்திர தினத்துக்கு முன்னதாக தீர்வு காணப்படும் என்பதும், அதற்காக வடக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அடுத்த வாரம் பேசுவதற்கு தான் தயாராகவிருப்பதாகவும் தான் அவர் தெரிவித்திருந்தார்.

அரசியல் தீர்வு தொடர்பாக இந்த பாராளுமன்ற உரையின் போது அவர் எதனையும் தெரிவிக்கவில்லை.ஆனால் சில மாதங்களுக்கு முன்னர் அவர் நிகழ்த்திய உரை ஒன்றில் ஒரு வருடத்துக்குள் புதிய அரசியலமைப்பு கொண்டு வரப்படும் என அவர் குறிப்பிட்டிருந்தார். அதற்கான முன்னகர்வுகள் எதுவும் இதுவரையில் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக தகவல் இல்லை.

அடுத்த வாரம் பேசுவோம் என ரணில் தெரிவித்து இப்போது இரண்டு வாரங்கள் சென்று விட்டது. ஆனால், பாராளுமன்றத்தில் தெரிவித்ததை விட தமிழ்க் கட்சிகள் எதற்கும் உத்தியோகபூர்வமான அழைப்புக்கள் எதுவும் இக்கட்டுரையை எழுதிக் கொண்டிருக்கும் தருணம் வரை அனுப்பப்படவில்லை.

வரவு செலவுத் திட்ட உரையின் பின்னர் பாராளுமன்ற உணவகத்தில் இடம்பெற்ற தேநீர் விருந்துபசாரத்தின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் இது தொடர்பில் கேள்வி எழுப்பியிருந்தார். அதற்கு அடுத்த வாரம் பேசுவோமா? என ரணில் திருப்பிக் கேட்டதுடன் விவகாரம் அப்படியே நிற்கின்றது. அதேவேளையில், ஜனவரியில் நான் யாழ்ப்பாணம் வருவேன் அப்போது பேசலாம் என ரணில் சொன்னதாகவும் ஒரு தகவல் உள்ளது.

ஆக, ரணில் பேசுவோம் என்றொரு கருத்தை வெளியிட்டிருக்கின்றாரே தவிர, பேச்சுவார்த்தை ஒன்றுக்கான தயாரிப்புக்களில் அவர் தீவிர அக்கறையுடன் இருப்பதாகத் தெரியவில்லை. தற்போதைய நிலையில் வேறு முக்கியமான பிரச்சினைகள் ரணிலைக் குடைந்து கொண்டுள்ளன.

ரணிலைப் பொறுத்தவரையில் தனது வரவு செலவுத் திட்டத்தை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் எப்படியும் நிறைவேற்றி விட வேண்டும் என்பதில் குறியாகவுள்ளார். வரவு செலவுத் திட்ட இரண்டாவது வாசிப்பின் போது தனது பலத்தை வெளிப்படுத்திய அவர் இனி குழுநிலை விவாதங்களின் போதும் அதனை வெளிப்படுத்த வேண்டியவராக உள்ளார்.

அமைச்சர் பதவிகளைக் கேட்டு அடம் பிடிக்கும் மொட்டு அணியினரை சமாளிப்பது போன்றவற்றிலேயே அவரது கவனம் இப்போது முழுமையாக உள்ளது. பஸில் ராஜபக்ஷ நாடு திரும்பியிருப்பது இந்த நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்தலாம். இந்த நிலையில் தமிழ்த் தரப்பினருடன் பேச்சுக்கான அழைப்பை விடுத்தாலும், அதற்கான கதவுகளைத் திறப்பதிலும் அவர் நிதானமாகத் தான் உள்ளார். தமிழ்த் தரப்பில் உள்ள முரண்பாடுகளைப் தெரிந்து வைத்துள்ள அவர் தமிழ்த் தரப்பினர் ஒற்றுமையாக வந்தால் பேச்சுக்களை ஆரம்பிக்கத் தயார் என இப்போது பந்தை தமிழர் தரப்பினரிடம் தட்டி விட்டுள்ளார். எம்மவர்கள் என்ன செய்யப் போகின்றார்கள் என்பதைத் தான் இப்போது அனைவரும் பார்த்துக் கொண்டுள்ளார்கள்.

தமிழ்த் தரப்பினருடன் பேச்சுக்குச் செல்ல வேண்டும் என்பதற்கான நிர்ப்பந்தம் அவருக்கு பல்வேறு மட்டங்களிலிருந்தும் உருவாகியிருக்கின்றது. பொருளாதார நெருக்கடி இந்த நிலையை மேலும் தீவிரப்படுத்தியிருக்கின்றது என்பதும் உண்மை.

சர்வதேச நாணய நிதியத்தின் மூலமாக எதிர்பார்த்த உதவிகள் தாமதமாகிக் கொண்டே செல்கின்றது. அவர்களுடைய கடினமான நிபந்தனைகளை நிறைவேற்றுவதில் அரசுக்கு நெருக்கடிகள் உள்ளன. அவர்களைத் திருப்திப்படுத்தாமல் மற்றைய நாடுகளிடமிருந்து உதவிகளைப் பெற்றுக் கொள்வதும் சாத்தியமாகாது. அடுத்த ஏப்ரல் வரையில் ஐ.எம்.எப். உடன்படிக்கை தாமதமடையலாம்.

இதனால், வெளிநாட்டு முதலீடுகள் மட்டும் தான் அரசாங்கத்தை பாது காக்கக் கூடியவவையாகவுள்ளன. ஆனால், வெளிநாட்டு முதலீட்டாளர்களை அரசாங்கம் அழைத்தாலும், அவர்கள் இலங்கையை விட தமக்கு லாபம் தரக்கூடிய சிங்கப்பூர் தாய்லாந்து, தென்கொரியா போன்ற நாடுகளைத் தான் நாடிச் செல்கின்றார்கள். இலங்கையின் உள் கட்டமைப்பு வசதிகள், சட்டம், ஸ்திரமற்ற நிலை என்பன இதற்கு காரணம். உறுதியற்ற இந்த நிலைமைகளால், இலங்கையை விட இலகுவாகச் சென்றடையக் கூடிய நாடுகளை அவர்கள் நாடிச்செல்வது இயல்பானது தான்.

இந்த நிலையில் புலம்பெயர்ந்த தமிழ் முதலீட்டாளர்களை நாட வேண்டியது தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டது. கனடா உட்பட ஐரோப்பிய நாடுகளில் இருந்தும் இலங்கையைத் தாயகமாகக் கொண்டு தமிழ்த் தொழிலதிபர்கள் சிலர் அண்மையில் கொழும்புக்கு அழைக்கப்பட்டது இந்தப் பின்னணியில் தான். இவர்கள் வெறுமனே முதலீடு செய்து இலாமமீட்டுவது என்பதற்கு அப்பால், அரசியல் ரீதியான சில விடயங்களையும் முன் வைத்திருக்கின்றார்கள்.

கனேடியத் தமிழர் பேரவை முன் வைத்துள்ள தமிழ் மக்கள் சார்ந்து நிறைவேற்றப்பட வேண்டிய பத்து கோரிக்கைகள் குறித்து அவதானம் செலுத்தப்படும் என இலங்கையின் நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்திருப்பது கவனிக்கத்தக்கது. ஆக, புலம் பெயர்ந்த தமிழ் மக்களைத் திருப்திப்படுத்துவதற்கு சிலவற்றை செய்யவேண்டிய நிர்ப்பந்தம் அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருக்கிறது என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது.

தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்பதும் இனவாதமற்ற ஒரு நிலை இலங்கையில் காணப்பட வேண்டும் என்பதுடன், இன நெருக்கடிக்கு அரசியல் தீர்வு காணப்பட்டிருக்க வேண்டும் என்பதும் அவர்களுடைய எதிர் பார்ப்பாகவுள்ளது. அதன் மூலமாகவே தமது முதலீடுகளுக்கு எதிர்காலத்தில் பாதுகாப்பு கிடைக்கும் என்பது அவர்கள் கருத்து. இவ்வாறு புலம்பெயர்ந்த மக்களின் முதலீடுகள் அதிகளவுக்கு வந்தால், அதனால் ஏற்படக்கூடிய நம்பிக்கையால் வேறு பெரும் முதலீடுகளும் வரலாம் என ரணில் தரப்பு நம்புகின்றது.

ரணில் விக்கிரமசிங்க தமிழ்த் தரப்புக்கு அழைப்பு விடுத்தமைக்கு இவை எல்லாம் தான் காரணம். ஆனால், அவரது அழைப்பு தெளிவற்றதாக உள்ளது. அவர் பாராளுமன்றத்தில் நிகழ்த்திய உரையில் இரண்டு விடயங்கள் மட்டும் தான் குறிப்பிடப்பட்டிருந்தன. விரைவில் இந்தப் பேச்சுவார்த்தை இடம் பெறுமாக இருந்தாலும், ஜனாதிபதியின் நிகழ்ச்சி நிரலில் கைதிகள் விடுதலையும், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரமும் தான் இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

ஆனால், ஒரு வகையில் தமிழ்த் தரப்பு பலமான நிலையில் அதாவது பேரம் பேசக்கூடிய நிலையில் இருக்கின்றது என்பதை தற்போது இடம் பெறும் நிகழ்வுகள் உணர்த்துகின்றன.

ரணிலின் பாராளுமன்ற உரையையடுத்து தமிழ்த் தரப்புக்களும் தம்மைத் தயார்படுத்துவதற்கு முற்பட்டுள்ளன. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், தமிழ்க் கட்சிகள் சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்த வேண்டும் எனக் கூறியிருந்தார். தனித்தனியாக அல்லாமல் ஒருமித்த குரலில் தமிழ்த் தரப்புக்கள் பேச வேண்டும் என்ற அழுத்தங்களால் சுமந்திரன் முன்னெடுத்த முதலாவது நகர்வு பிசுபிசுத்துப் போய் விட்டது.

சுமந்திரனிடமிருந்து அழைப்பு முறையாக விடுக்கப்படவில்லை. போதிய கால அவகாசம் இல்லை. இந்த அழைப்பை விடுப்பதற்கு சுமந்திரன் பொருத்தமானவரல்ல என்ற கருத்துக்களை முன் வைத்த பங்காளிக் கட்சிகளும் ஏனைய தமிழ்க் கட்சிகளும் அழைப்பை புறக்கணித்தன.

இதனால், சம்பந்தரின் இல்லத்தில் சம்பந்தருடன் மாவை சேனாதிராஜாவும், சுமந்திரனும் மட்டுமே கூடிக் கலைந்துள்ளார்கள். தமிழரசுக் கட்சியின் ஏனைய உறுப்பினர்கள் கூட இந்த அழைப்பைப் பொருட்படுத்தவில்லை.

இப்போது, தமிழ்க் கட்சிகளை மீண்டும் கூட்டுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. சுமந்திரனுக்குப் பதிலாக மாவை சேனாதிராஜா அழைப்பை விடுப்பார் என்றும், சம்பந்தனின் இல்லத்துக்குப் பதிலாக மற்றொரு பொது இடத்தில் சந்திப்பை நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. இருந்த போதிலும், 25 ஆம் திகதி சம்பந்தனின் இல்லத்திலேயே சந்திப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுடன் சுரேஷ் பிரேமச்சந்திரன், சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோருக்கும் இதற்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தரப்புக்கள் சமஷ்டித் தீர்வு என்ற கோரிக்கையுடன் இந்தப் பேச்சுக்குச் செல்வதற்குத் தீர்மானித்திருக்கின்றன. சுமந்திரனும் இதனைத் தான் தெரிவித்திருந்தார். பாராளுமன்றத்தில் உரையாற்றிய சிறிதரனும் இதனை வலியுறுத்தியிருந்தார். கஜேந்திரகுமாரும் இந்த நிலைப்பாட்டுடன் ஒத்துப் போகும் ஒருவராகத் தான் இருக்கின்றார்.

ஆனால், கேள்வி என்னவென்றால், அரசியல் தீர்வு தொடர்பாக பேசுவதற்கு இப்போதைக்கு ரணில் தயாராக இருப்பாரா என்பது தான். புதிய அரசியல் சாசனம் ஒன்றை ஒரு வருடத்துக்குள் தயாரித்து விட முடியுமா என்ற கேள்வியும் உள்ளது. பாராளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெற்றுள்ள பொதுஜன பெரமுன சமஷ்டியை ஏற்பார்களா என்பது புறக்கணித்துவிட முடியாத மற்றொரு கேள்வியாக எம் முன்பாக இருக்கின்றது.

அதேவேளையில், அடுத்த நவம்பருக்குப் பின்னர் மொட்டு அணியின் ஆதரவுடன் திடீர் ஜனாதிபதித் தேர்தல் ஒன்றுக்குச் செல்வதற்கு திட்டமிடும் ரணில் விக்கிரமசிங்க சமஷ்டி அடிப்படையிலான தீர்வு ஒன்றுக்கு இணங்குவாரா என்பதும் முக்கியமான கேள்வி. இதனால், தற்போது அரசியலமைப்பில் உள்ள 13 ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு கோருவது தான் புத்தியசாலித்தனமானது - இராஜதந்திரமானது என்பதுடன் சாத்தியமானது என்ற கருத்தும் சில தமிழ்த் தரப்புக்களால் சுட்டிக் காட்டப்படுகின்றது.

பொருளாதார நெருக்கடியும், புலம் பெயர்ந்த தமிழ்த் தொழிலதிபர்களின் பலமும் தமிழ்த் தரப்புக்கு பேரம் பேசும் பலத்தைப் பெற்றுக் கொடுத்திருக்கின்றது. பல சந்தர்ப்பங்களைத் தவற விட்ட தமிழ்த் தரப்பு இந்த வாய்ப்பை எவ்வாறு இராஜதந்திரமாகப் பயன்படுத்தப் போகின்றது என்பதைத் தான் தமிழ் மக்கள் அவதானித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

# குறுகிய சந்துக்குள் கூக்குரலிடாமல் விரிந்த வெளியில் சிறகை விரியுங்கள்!

கட்டுரையாளர்:
கிளிநொச்சியில் இருந்து
– கருணாகரன் –



தமிழரசுக் கட்சி காலமாகி விட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஏறக்குறைய செல்லாக் காசாகி விட்டதாகச் சொல்கிறீர்கள். அப்படியென்றால், அடுத்ததாக உங்கள் தெரிவு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியா? அல்லது விக்கினேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியா? அல்லது ஐங்கரநேசனின் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கமா? அல்லது சிவாஜிலிங்கம் — ஸ்ரீகாந்தாவின் தமிழ்த்தேசியக் கட்சியா? அல்லது வேறு ஏதாவது உண்டா?'' என்று கேட்கின்றனர் சில நண்பர்கள்.

இதற்கு என்ன பதிலைச் சொல்ல முடியும்?

ஏனென்றால், இவர்கள் தேடுவது தங்களுக்குத் தெரிந்த வட்டத்திற்குள் தான். அதற்கப்பால் வேறொன்றைப் பற்றிச் சிந்திப்பதில்லை. அப்படிச் சிந்திப்பதற்குத் துணிவதும் இல்லை. நாம் புதிதொன்றைச் சிந்தித்தால் தான் முன்னேற முடியும். மாற்றங்களைக் காண முடியும். அதற்குத் துணிச்சல் வேண்டும். அந்தத்துணிச்சலே மாற்றங்களைத் தரும். நமக்குத் தேவையான பயனை உண்டாக்கும்.

ஒரு சிறிய உதாரணம் 1970, 80 களில் அரசியல் நெருக்கடி ஏற்பட்ட போது தமிழ் இளைஞர்களில் ஒரு தரப்பினர் போராடுவதற்கென்று இயக்கங்களுக்குப் போனார்கள். இன்னொரு சாரார் புலம் பெயர்ந்து சென்றனர். இரண்டும் அன்றைய நெருக்கடிச் சூழலை எதிர்கொள்வதற்கான மாற்று ஏற்பாடுகள் தான். இதை அன்றைய அரசியல் கட்சிகளோ தலைவர்களோ செய்யவில்லை. இதற்கு வழிகாட்டவும் இல்லை.

தமக்கு முன்னுள்ள நெருக்கடிக்கு முகம் கொடுப்பதற்கெனப் புதிதாக அன்றைய இளைஞர்கள் துணிச்சலாகச் சிந்தித்தனர். அது தான் போராட்டமாகியது. அது தான் பின்பு புலம்பெயர் சமூகமாகியது. ஆகவே இன்றும் அதைப் போன்ற ஒரு நிலை ஒரு சூழலே உருவாகியுள்ளது.

இந்தச் சூழலைப் புரிந்து கொண்டு பொருத்தமான தீர்மானத்தை மக்கள் எடுக்க வேண்டும். குறிப்பாக இளைய தலைமுறையினர் இதில் துணிவோடும் ஆற்றலோடும் செயற்பட வேண்டும். முற்றிலும் புதிதாகச் சிந்தித்தால் ஒழிய, தமிழ் அரசியலில் மாற்றத்தை உருவாக்கவே முடியாது. தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வையும் காண முடியாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, தமிழ்த் தேசியக் கட்சி, தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம், தமிழ் மக்கள் கூட்டணி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழத்தமிழர் சுயாட்சிக் கழகம் என ஏராளம் கட்சிகள் இன்று விளைந்து போயுள்ளன. எதிர்காலத்தில் இதைப் போல இன்னும் சில கட்சிகள் உருவாகக் கூடும். அதற்கான சாத்தியங்களே உண்டு.

அரசியல் நெறிமுறை தவறி, ஜனநாயக வெளி சுருங்கச் சுருங்க கட்சிகளின் பெருக்கம் அதிகரிக்கும்.

இப்படிப் பல கட்சிகள் பெருகியுள்ள போதும் தமிழரின் இனப்பிரச்சினைக்கு ஏதாவது தீர்வு கிட்டியுள்ளதா? தமிழ் மக்கள் நாளாந்தம் சந்தித்துக் கொண்டிருக்கும் பிரச்சினைகளில் ஏதாவது ஒன்றுக்குப் பரிகாரம் காணப்பட்டதா?

ஒன்றுமே நடக்கவில்லை. ஏனென்றால், இவற்றுக்கிடையில் பெரிய வேறுபாடுகள் எதுவுமில்லை. எல்லாமே ஒரு மையத்திலிருந்து பிரிந்தவையே. அதாவது ஒரு அச்சில் வார்க்கப்பட்டவை. கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு இவை எல்லாம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் இருந்தவை. அதிலிருந்து கொள்கையின் அடிப்படையில், குணாம்ச வேறுபாட்டினால் பிரிந்தவை அல்ல. நடைமுறைப் பிரச்சினைகளால் பிரிந்தவை. குறிப்பாக அதிகாரப் போட்டியினால், பிளவுண்டவை.

இதில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி தான் ஓரளவுக்கு தீர்வு யோசனைகளால் (ஒரு நாடு இரு தேசம் என) வேறுபட்டு நிற்கிறது. அதுவும் தன்னுடைய அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் விதத்தில் வேறுபடவில்லை. மற்றும் படி சம்மந்தன், சுமந்திரன் போன்றோருடன் ஏற்பட்ட முரண்பாடுகளால் பிரிந்தவையே இந்தக் கட்சிகள். சிவாஜிலிங்கம், ஸ்ரீகாந்தா போன்றோர் ரெலோவில் செல்வம் அடைக்கல



நாதனுடன் உண்டான பிணக்கின் நிமித்தமாக வெளியேறித் தனி அணியை உருவாக்கியவர்கள். ஒப்பீட்டளவில் ஐங்கரநேசன் மட்டுமே சற்று வேறுபட்டுச் செயற்படுகிறார். யாழ்ப்பாணத்திற்குள் தான் அவர்களுடைய செயற்பாட்டு வீச்செல்லை வலுவானதாக இருந்தாலும் அதில் செயற்பாட்டுத் தன்மையைக் கொண்டிருக்கிறார். குறைந்த பட்சம் சூழலையாவது அவர் வளப்படுத்துவதற்கு முயற்சிக்கிறார். இதனால் தான் செல்வின் போன்றவர்கள் ஐங்கரநேசனோடு மேடைகளில் வெளிப்படையாகத் தோன்றுகிறார்கள். நான்கு மரங்களாவது சமூகத்தில் வளரட்டும் என்று. மற்றவை எல்லாமே ஒரே வாய்பாட்டைக் கொண்டவை.

இந்தக் கட்சிகளில் பெரும்பாலானவற்றின் பெயர்களில் கூட அதிகம் வித்தியாசமில்லை. சட்டென்று பார்க்கின்றவர்களுக்கு எல்லாமே ஒன்று போலத் தோன்றக் கூடியவை. அது உண்மையும் தான். தமிழ்த் தேசியம்'' என்ற சொல்லை அடைமொழியாக வைத்தால் தான் மக்களுடைய வாக்குகளை அறுவடை செய்யலாம் என்று கருதுவதன் விளைவு இது. இது முழுமையான தந்திரமே. மக்களை மடையர்களாக்கும் அபத்தச் சிந்தனை.

இவ்வளவுக்கும் இவர்களில் எவருக்கும் (எந்தக் கட்சியினருக்கும்) தாம் கருதுகின்ற கூறுகின்ற தமிழ்த்தேசியம் என்பதற்கான அடிப்படைப் புரிதலோ விளக்கமோ கிடையாது. கட்சியின் பெயரில் மட்டும் விளம்பர லேபிளாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். தமிழ்த் தேசியம் குறித்த சரியான புரிதல் இருந்தால், அதைப் பலப்படுத்தும் விதமாகச் செயற்பட்டிருப்பர். இப்படிப் பலவீனப்படுத்தும் விதமாக நடந்து கொள்ள மாட்டார்கள்.

இந்தத் தமிழ்த்தேசிய நோய் 2000 த்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டபோது உருவானது. இப்பொழுது அது முற்றிப் பெருகிக் கொண்டிருக்கிறது. ஆனால், இதை உருவாக்கும் போது பின்னாளில் இப்படியெல்லாம் சீரழிவுகளைச் சந்திக்க வேண்டும் என்று இதை உருவாக்கிய புலிகளும் கருதியிருக்கவில்லை. இதற்கு அனுசரணையாக இருந்தோரும் கருதவில்லை. அவர்கள் இருந்திருந்தால் தலையில் கையை வைத்திருப்பார்கள். பலருக்குத் தலையில் தீர்ப்பையே எழுதியிருக்கவும் கூடும்.

1970களில் உருவாகிய ஆயுதப் போராட்ட இயக்கங்கள் ஈழம் தமிழீழம் என்ற சொல்லை அர்த்தபூர்வமாகவே பயன்படுத்தின. ஆனால் 1980களில் ஏட்டிக்குப் போட்டியாக ஆளுக்கு ஒரு இயக்கம் என்று ஆரம்பிக்கப்பட்ட போது, ஈழம் தமிழீழம் என்பதெல்லாம் ஒரு பாஷனுக்காக வைத்துக் கொண்டதைப் போலத் தான் இன்றைய தமிழ் அரசியற் கட்சிகள் தமிழ்த்தேசியம் என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றன. ஆகவே, தமிழரின் வரலாறு முன்னோக்கி நகரவேயில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு 20 ஆண்டுகள் கடந்து விட்டன. விடுதலைப்புலிகளின் ஆதிக்கமில்லாமல், அது சுயாதீனமாகச் செயற்படத் தொடங்கி 13 ஆண்டுகளாகி விட்டன. இதுவரையில் அது என்ன செய்திருக்கிறது? இனி என்ன செய்ய உத்தேசித்துள்ளது?

உருப்படியாகச் செய்தது என்றால் எட்டுப் பத்துக் கட்சிகளைக் குட்டி போட்டது தான் மிச்சம். அதாவது எதிர்த்தரப்புக்கு வாய்ப்பைக் கொடுத்தது. இப்படித் தன்னுடன் இணைந்திருந்த தரப்புகளை உடைத்துச் சிதறடித்து பல அணிகளாக்கி விட்டு, இப்பொழுது ஒற்றைமையைப் பற்றி அது பேசுகிறது. இதைக் கேட்கும் போது முட்டாளுக்கும் சிரிப்பு வரும். ஆனால், கூட்டமைப்பின் தலைவர்கள் இதை வாய் கூசாமல் சொல்கிறார்கள். அவர்களுடைய கணிப்பில், தமிழ் மக்கள் மகா மூடர்கள் என்பதாகவே உள்ளனர். அந்த நம்பிக்கையில்தான் மக்களுடைய நம்பிக்கைக்கும் எதிர்பார்ப்புக்கும் மாறாகத் துணிச்சலாக அவர்களால் கதைக்கவும் செயற்படவும் முடிகிறது.

கூட்டமைப்பைப் போலத் தான் ஏனைய தரப்புகளும். அவற்றிடமும் எந்தப் புதினமும் இல்லை. எந்த மாற்று வழியும் கிடையாது. எத்தகைய மக்கள் நலத் திட்டங்களும் இல்லை. செயற்பாட்டுக்கான வழிமுறையோ அர்ப்பணிப்புணர்வோ கிடையாது. எல்லோரும் வெறும் வாய்ப் பேச்சு வீரர்களாகத்தான் உள்ளனர்.

இதனால் தான் இவர்கள் எவரையும் பொருட்படுத்தாமல் மக்கள் தங்களுக்கான போராட்டத்தை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றனர். கேப்பாப்பிலவுப் போராட்டம், இரணைதீவுத் தரையிறக்கம், வலி வடக்கு நில மீட்புப் போராட்டங்கள், காணாமலாக்கப்பட்டோரின் போராட்டம், குருந்தூர் மலைப் போராட்டம் என அனைத்துப் போராட்டங்களையும் மக்கள் சுயாதீனமாக முன்னெடுக்கின்றனர். மக்கள் முன்னெடுக்கும் போராட்டங்களில் இந்தக் கட்சிகள் வெட்கமில்லாமல் போய் ஒட்டிக் கொள்கின்றன. அவ்வளவு தான்.

உண்மையில் இந்தத் தமிழ் அரசியற் கட்சிகள் செயலிழந்து விட்டன. கோட்பாட்டாலும் நடைமுறைகளாலும் இவை தோற்று விட்டன. பாராளுமன்றத்தில் உரத்துப் பேசுவதற்கு அப்பால் இவற்றிடம் வேறு எந்தப் பொருளுமே இல்லை. முன்பொரு காலம் அடங்காத் தமிழன் சுந்தரலிங்கம், தளபதி அமிர்தலிங்கம், இரும்பு மனிதன் நாகநாதன், தந்தை செல்வநாயகம், அடங்காச் சிங்கம் ஜீ.ஜீ.பொன்னம்பலம், கோப்பாய்க் கோமகன் வன்னியசிங்கம் என அன்றைய தலைவர்கள் முழங்கியதைப் போல இப்பொழுது சாணக்கியன், சிறிதரன், சுமந்திரன், கஜேந்திரன்கள் முழங்குகிறார்கள்.

இதைக் கேட்கும் 'போது பலருக்கும் உடலில் புல்லரிக்கும். ரோமங்கள் சிலிர்க்கும். அவ்வளவு தான். அதற்கப்பால் இவற்றுக்கு எந்த அரசியல் பெறுமானமும் கிடையாது.

ஒடுக்கு முறைக்குள்ளாகிய மக்களின் அரசியலை முன்னெடுக்கும் விதமே வேறு. விடுதலைக்கான அரசியல் வழியே வேறு. அது நடைமுறை அரசியலோடு இணைந்தது. மக்களோடு பின்னிப் பிணைந்தது. பிரமுகர்த்தனத்துக்கு (வெள்ளை ஆடைக்கு) மாறானது. அர்ப்பணிப்பு மிக்கது. இதைப் புரிந்து கொள்ளாத வரை இப்படித்தான் தோல்வியும் பின்னடைவும் நிகழும்.

எனவே தான் தமிழரசுக் கட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஏனைய தரப்புகளும் இன்று பயனற்றவை ஆகி விட்டன என்று ஆதாரபூர்வமாகவே சொல்ல வேண்டியுள்ளது. ஏன், தமிழ் மக்கள் பேரவை என்றொரு அமைப்பு மிக மூன்று ஆண்டுகளுக்கு முன்பு வலு டாம்பிகமாக ஆரம்பிக்கப்பட்டது. எழுக தமிழ் என்றொரு பிரமாண்ட எழுச்சிக் கூட்டமும் நடத்தப்பட்டது. இப்பொழுது அந்தப் பேரவை எங்கே? அந்த எழுச்சிக்கு என்ன நடந்தது?

இப்பொழுது தமிழ்த்தேசியப் பேரவை என்றொரு அமைப்பு உருவாகியுள்ளது. இது எத்தனை மாதம் தாக்குப் பிடிக்கும் என்று தெரியவில்லை.

இது போலப் பல வரலாற்றுச் சோகங்கள் (வரலாற்று வேடிக்கைகள்) உண்டு. இதைக்குறித்த விமர்சங்களும் கேள்விகளும் பரவலாக எழுந்துள்ளன.

இதை தனியே நான் மட்டும் சொல்லவில்லை. நானும் என்னைப் போன்ற சிலரும் இதை அழுத்தமாகச் சில ஆண்டுகளாகச் சொல்லி வருகிறோம். அப்பொழுது பலரும் இதை முகச் சுழிப்புடன் பார்த்தனர். தங்கள் காதுக்குள் கிசுகிசுத்துக் கொண்டனர். ஆனால், இன்று அவர்களே இதைப்பற்றிப் பகிரங்கமாகப் பேசத் தொடங்கியுள்ளனர்.

தமிழ்த்தேசியத் தரப்புகளின் பலவீனத்தை, திறனின்மையை, நேர்மையீனத்தை, அதிகார மமதையை, ஜனநாயக விரோதப்போக்கை, ஆற்றலின்மையை, அர்ப்பணிப்பற்ற தனத்தைப் பற்றிப் பலரும் எழுதியும் பேசியும் வருகின்றனர்.

முன்பு இந்தத் தரப்பினரைப் பலப்படுத்த வேண்டும் என்று கருதிய நிலாந்தன், யதீந்திரா, யோதிலிங்கம், தேவராஜ், சிவகரன், வித்தியாதரன், கே.ரி.கணேசலிங்கம், மாணிக்கவாசகம் உட்பட அனைத்துத் தரப்பினரும் போட்டு வாங்குகின்றனர். இருந்தாலும் இன்னும் இவர்களிடம் புதிய அரசியலைக் குறித்த தடுமாற்றம் குழப்பம் உள்ளது. அதனால் தான் இவற்றையே எப்படியாவது சரிசெய்து ஓட்டலாம் என்று கருதுகிறார்கள். ஆனால், உக்கிப்போன இயந்திரத்தை என்ன தான் செய்ய முடியும்?

இதைக் கடந்து —மீறி புதிதாகச் சிந்திக்கும் திராணி பலருக்கும் ஏற்படவில்லை. என்பதால் தான் இந்தத் துயரமும் (22ம் பக்கம் பார்க்க)

# இந்தியாவைக் கட்டுப்படுத்துகிறதா சீனா?

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
-கேணல் ஹரிகரன் -



அமெரிக்காவின் இந்தோ- பசுபிக்கும், இந்தியாவின் இந்தியப் பெருங்கடலும் இப்போது, சீனாவின் அச்சுறுத்தலுக்கு முகம் கொடுத்து நிற்கின்றன.

தென் சீனக் கடலில் சீனாவின் ஆதிக்கத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அமெரிக்காவும் அதன் கூட்டு நாடுகளும் முயற்சித்து வந்த நிலையில் சீனா தனது கடல் ஆதிக்கத்தை இந்தியப் பெருங்கடலை நோக்கி விரிவுபடுத்தியிருக்கிறது.



இந்தியப் பெருங்கடலை அமைதி வலயமாக பேண வேண்டும் என்ற தீர்மானம் ஐ.நா பொதுச்சபையில், 1771ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட நிலையில், பல தசாப்தங்களுக்குப் பிறகு முன்னெப்போதும் இல்லாதளவுக்கு. ஆதிக்கப் போட்டி இங்கு உருவாகியிருக்கிறது. சீனாவுக்கும், அமெரிக்க- இந்தியக் கூட்டுக்கும் இடையிலேயே, இந்தப் போட்டிச் சூழல் காணப்படுகிறது. இந்தியப் பெருங்கடலை இந்தியா தனது ஆதிக்கத்துக்குட்பட்ட பகுதியாக கருதிய காலம் இப்போது மாறி விட்டது.

இந்தியாவின் பொருளாதாரக் கடல் எல்லையைத் தொட்டபடி சீனப் போர்க்கலங்கள், நடமாடத் தொடங்கி விட்டன. அவ்வப்போது, அவை இந்தியாவின் பொருளாதாரக் கடல் எல்லைக்குள்ளேயும் வந்து செல்வதாக இந்தியக் கடற்படையினர் சந்தேகிக்கிறார்கள்.

கடந்த ஓகஸ்ட் மாதம், அம்பாந்தோட்டை துறைமுகத்தில், 'யுவான் வாங்- 5' என்ற செய்மதி, மற்றும் ஏவுகணைகளின் வழித் தடத்தை கண்காணிக்கும் ஆய்வுக் கப்பலை சீனா, இந்தியாவுடன் மல்லுக்கட்டி தரித்து நிறுத்தியதானது, இந்தப் போட்டியை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தியிருக்கிறது. இந்தியாவின் எதிர்ப்பை புறக்கணித்து, இலங்கையை பணிய வைத்து அந்தக் கப்பல் அம்பாந்தோட்டையில் நிறுத்தப்பட்டது.

இந்தியா எதிர்ப்புத் தெரிவித்த போது, தாங்கள் அந்தக் கப்பலினால் ஏற்படக்கூடிய ஆபத்துக் குறித்த ஆதாரங்களைக் கோரியதாகவும் இந்தியா சமர்ப்பிக்காத நிலையில் கப்பலை அனுமதித்ததாகவும், வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கூறியிருந்தார்.

ஆனால், இலங்கையின் கடல் எல்லைக்குள் நுழையும் போதே அதன் கண்காணிப்புக் கருவிகளை நிறுத்தி வைக்குமாறும், அம்பாந்தோட்டையில் தரித்து நிற்கும் போது, எந்தக் கண்காணிப்பு கருவிகளையும் செயற்படுத்தக் கூடாது என்றும், இலங்கை அரசாங்கம் நிபந்தனை விதித்திருந்தது.

குறித்த ஆய்வுக் கப்பலினால் இந்தியாவுக்கு அச்சுறுத்தல் இல்லை என்றால், ஏன் இந்த கருவிகளை செயலிழக்கச் செய்யுமாறு இலங்கை அரசாங்கம் நிபந்தனை விதித்தது? இந்தக் கப்பலின் வருகைக்குப் பின்னர், தனது பாதுகாப்பு குறித்து இந்தியா அதிகம் கரிசனை கொள்ள ஆரம்பித்திருக்கிறது. இலங்கையை முழுமையாக நம்ப முடியாது என்ற முடிவுக்கும் வந்திருக்கிறது.

அதேவேளை, இலங்கையில் தன் ஆதிக்கத்தை உறுதிப்படுத்திக் கொண்டிருக்கும் சீனா, இப்போது, இந்தியப் பெருங்கடலில், நேரடியாகவே இந்தியாவின் பாதுகாப்புக்கு சவால் விட ஆரம்பித்திருக்கிறது.

கடந்த 10ஆம், 11ஆம் திகதிகளில், இந்தோனேசியாவுக்கும் இலங்கைக்கும் இடைப்பட்ட கடற்பிராந்தியத்துக்கு மேலாக, விமானங்களின் பயணங்களை தவிர்க்குமாறு இந்தியா சர்வதேச விமான நிறுவனங்களுக்கு அறிவித்திருந்தது.

ஒடிசாவின் அப்துல் கலாம் தீவில் இருந்து, அக்னி எவுகணையின் மேம்படுத்தப்பட்ட வடிவத்தை இந்தியா சோதனை செய்வதற்காகவே, இந்த அறிவிப்பை முன்கூட்டியே வெளியிட்டது.

இதனை அறிந்து கொண்ட சீனா, 'யுவான் வாங் -6' என்ற செய்மதி, மற்றும் ஏவுகணை வழித்தடக் கண்காணிப்புக் கப்பலை இந்தோனேஷியாவின் பாலித்தீவு கடற்பகுதிக்கு அனுப்பியிருந்தது.

இதனால் திட்டமிட்டபடி இந்தியா அந்த ஏவுகணைச் சோதனையை நடத்தவில்லை. சீனாவின் ஆய்வுக் கப்பல் பரிசோதிக்கப்படும் ஏவுகணையின் திறன், செல்லும் தூரம் போன்றவற்றைத் துல்லியமாக கணிப்பிடும் ஆபத்து இருந்தது.

சோதனை நடத்தப்பட்டிருந்தால், இந்தியாவின் ஏவுகணை இரகசியங்கள் சீனாவின் விரல் நுனிக்குச் சென்றிருக்கும். இந்த நிலையில், 23ஆம், 24ஆம் திகதிகளில் குறித்த பிரதேசத்தில் விமானங்களின் பயணத்தை தவிர்க்குமாறு, இந்தியா மீண்டும் அறிவித்திருக்கிறது.

ஏவுகணைச் சோதனையை நடத்துவதற்காகவே இந்தியா இவ்வாறான அறிவிப்பை விடுத்துள்ள நிலையில், அம்பாந்தோட்டையில் தரித்துச் சென்ற 'யுவான் வாங் -5' ஆய்வுக் கப்பலையும், இந்தியப் பெருங்கடலுக்கு அனுப்பி வைத்திருக்கிறது சீனா.

இப்போது சீனாவின் இரண்டு ஏவுகணை வழித்தட கண்காணிப்புக் கப்பல்கள், இந்தியப் பெருங்கடலில் தரித்து நிற்கின்றன. இவை, 110 நாள் பயணமாக புறப்பட்டவை. இப்போது தான் மூன்று வாரங்கள் கடந்துள்ளன. எனவே, நீண்ட நாட்கள் தரித்து நின்று, அவை கண்காணிப்பை மேற்கொள்ளக் கூடும். இது இந்தியாவுக்குப் பெரும் தலைவலியாக மாறியிருக்கிறது. சீனாவின் கண்காணிப்புக் கப்பல்களின் கண்களில் மண்ணைத் தூவி விட்டே, ஏவுகணைப் பரிசோதனையை மேற்கொள்ள வேண்டிய நிலையில் இந்தியா இருக்கிறது.

அது எப்படிச் சாத்தியப்படும் என்பது தான் முக்கியமான கேள்வி. இந்தியாவின் பொருளாதார கடல் எல்லையான 200 கடல் மைலுக்கு அப்பால் நின்று கொண்டே, இந்தியாவின் கரைகளை கண்காணிக்க கூடிய திறன் சீன ஆய்வுக் கப்பல்களுக்கு உள்ளது. எனவே இனிமேலும் ஏவுகணைச் சோதனைகளை சீனாவின் கண்களில் இருந்து மறைத்து நடத்த முடியாத நிலை இந்தியாவுக்கு ஏற்படலாம்.

நிலவுக்கு அஞ்சி பிற தேசம் போக முடியாது என்பது போல, சீனாவின் கண்காணிப்புக்கு அஞ்சினால் இந்தியா ஏவுகணைச் சோதனைகளையே நடத்த முடியாமல் போகலாம்.

வடகொரியாவைச் சுற்றி அமெரிக்கா, தென்கொரியா, ஜப்பான் என்று பல நாடுகள், ஏவுகணை கண்காணிப்பு வசதிகளைக் கொண்டிருக்கின்றன. ஆனாலும், அவற்றையெல்லாம் ஒதுக்கித் தள்ளி விட்டுத் தான், வடகொரியா, தொடர்ச்சியாக ஏவுகணைச் சோதனைகளை நடத்திக் கொண்டிருக்கிறது.

வடகொரியா சோதனை ரீதியாகவே இத்தனை ஏவுகணைகளை செலுத்துகிறது என்றால், அதன் மொத்த ஏவுகணைத் திறன் எவ்வளவு என்று திகைக்கும் நிலை உள்ளது.

இது ஒரு வகையில் கண்காணிக்கும் நாடுகளுக்கு பீதியை ஏற்படுத்தும் விடயமும் கூட ஆனால் இந்தியா அவ்வாறு பீதியை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்ளவில்லை.

அதேவேளை தனது ஆயுத வல்லமை பற்றிய இரகசியங்கள் சீனாவிடம் சிக்கி விடக் கூடாது என்று எதிர்பார்க்கிறது. ஏனென்றால் இந்தியாவுக்கு இப்போது பலம் வாய்ந்த போட்டி நாடாக இருப்பது சீனா தான். பாகிஸ்தானை எதிரியாக குறிப்பிட்டாலும் சீனாவை அவ்வாறு இந்தியா குறிப்பிடுவதில்லை.

ஆனால் சீனாவுடன் கொண்டுள்ள நீண்ட தரை வழி எல்லையும் அது தொடர்பாக நீடிக்கும் சர்ச்சைகளும், இந்தியாவை மிஞ்சிய படைபலமும், சீனாவின் ஆதிக்க கொள்கையும், இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது.

இந்த நிலையில் தமது பாதுகாப்பு பற்றிய குறை மதிப்பீட்டை செய்து விடக் கூடாது என்பதில் இந்தியா கரிசனை கொண்டிருப்பதில் நியாயம் உள்ளது. அதனால் தான் சீன கண்காணிப்புக் கப்பல்களின் கண்களில் சிக்கிக் கொள்ளும் வகையில் தனது ஏவுகணை சோதனையை நடத்துவதற்கு இந்தியா தயங்குகிறது.

இந்தியப் பெருங்கடலில் சீன ஆய்வுக் கப்பல்கள் தரித்து நிற்கும் வரை, இந்தியா தனது சோதனைகளை நீண்ட காலத்துக்கு தள்ளிப் போட முடிவெடுத்தால், அது இந்தியாவின் பலவீனமாகவே கருதப்படும். சீனா தொலைவில் நின்றே இந்தியாவின் சில தொழில்நுட்பத் திறன்களை மறைமுகமாக கட்டுப்படுத்த முனைகிறது.

தொழில்நுட்ப ரீதியாக இந்தியா இந்த சவாலை எவ்வாறு எதிர்கொண்டு சமாளிக்கப் போகிறது என்பது அடுத்த சில நாட்களிலோ வாரங்களிலோ தெரியவரும்.


அதேவேளை, இந்தியாவை ஒரு மூலோபாயப் போட்டியாளராக சீனா கருதவில்லை என்று, பங்களாதேஷில் உள்ள சீனத் தூதுவர் லீ ஜிம்மிங் அண்மையில், கூறியிருந்தார்.

அவ்வாறு போட்டியாளராக இந்தியாவைக் கருதவில்லை என்றால், சீனா ஏன் இந்தியப் பெருங்கடலில் இந்தியாவைச் சுற்றி வியூகம் வகுக்கிறது? என்பது புரியாமல் உள்ளது.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்
30வது ஆண்டு விழா:-
23 ஏப்ரல் 2023
"சங்கீத சங்கமம் 2023"

## ராஜீவ் கொலைக் கைதிகள் விடுதலை விவகாரம்:

# விடுதலைப் புலிகளுக்கு உதவிய இந்திய - வெளிநாட்டு சக்திகள்?



சென்னை மடல்
-பகவான் சிங்-

## வெளிக்கொணர்வதில் அரசு அக்கறை கொள்கிறதா?

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை அனுபவித்து வந்த ஆறு பேரை விடுதலை செய்து நவம்பர் 11 அன்று உச்ச நீதி மன்றம் வெளியிட்ட தீர்ப்பை எதிர்த்து, மறு சீராய்வு மனுவை இந்திய அரசு வியாழனன்று தாக்கல் செய்துள்ளது. இதையடுத்து, விடுதலை செய்யப்பட்ட இந்த ஆறு குற்றவாளிகளின் கொண்டாட்டங்களும் ஓய்ந்து போயின. டில்லியிலிருந்து வந்த, மத்திய அரசின் மறு சீராய்வு மனு குறித்த செய்தி, மகிழ்ச்சியை வண்ண வண்ண பலூன்களாகப் பறக்கவிட்டுக் கொண்டாடிக் கொண்டிருந்த ஆயிரக்கணக்கான அவர்களது ஆதரவாளர்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்களின் உற்சாகத்தைத் தரையிறக்கிவிட்டது. விடுதலைத் தீர்ப்பை எதிர்த்துத் தாக்கல் செய்யப்படும் மறு சீராய்வு மனுவுக்காக மத்திய அரசைக் குறைகூறும் இந்த ஏமாற்றமடைந்த ஆத்மாக்கள், இந்த அறுவர் விடுதலைக்கு எதிர்ப்பு தெரிவித்து வரும் காங்கிரஸ் கட்சியின் சில தலைவர்கள், மூத்த ஊடகவியலாளர்கள் போன்றவர்களையும் விமர்சிக்கின்றன

முன்னதாகவேகூட, இவர்களின் விடுதலை குறித்த கொண்டாட்டங்கள் சற்று அடக்கியே வாசிக்கப்பட்டன. காரணம், நளினியும் ரவிச்சந்திரனும் இந்தியக் குடிமக்கள் என்பதால், முழு விடுதலை பெற்றிருந்த நிலையில், மற்றைய நால்வரும் இலங்கைத் தமிழர்களாவதால், திருச்சியில் உள்ள முன்னாள் தீவிரவாதிகளுக்கான 'சிறப்பு முகாமுக்குள்' அடைக்கப்பட்டனர். நளினியின் கணவர் சிறிஹரன் என்கிற முருகன், சாந்தன், றொபர்ட் பயஸ் மற்றும் ஜெயகுமார் ஆகியோரே அந்த நால்வர். உச்ச நீதி மன்றத் தீர்ப்பின் உண்மையான அர்த்தத்துக்கு ஏற்றபடி, இந்த நால்வரையும் அரசு விடுவிக்கவேண்டும் என்று அவர்களும் அவர்களது ஆதரவாளர்களும் கோரிவருகின்றனர்.

என் இனிய 'ஈழநாடு' வாசகர்களே, இந்த அறுவர் விடுதலை குறித்தும் அதைத் தொடர்ந்த இந்திய அரசின் மறு சீராய்வு மனு குறித்தும் நீங்கள் அறிந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். அதனால், நுணுக்கமான தகவல்களுக்குள் செல்ல நான்



விரும்பவில்லை. மாறாக, இந்த விஷயத்தில் என் கருத்துகளை மட்டுமே நான் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். உங்களிடம் நான் முன்னமே பலமுறை சொன்னதுபோல், ஒரு பத்திரிகையாளனாக ஈழப் போருடன் என் நீண்ட நாள்

தொடர்பிலிருந்து நான் கற்றவை எனது இந்தக் கருத்துகள். இந்த ஆறு கைதிகளை விடுதலை செய்யும் போது, மே 18 அன்று மற்றொரு ராஜீவ் காந்தி கொலையாளியான பேரறிவாளனை விடுதலை செய்த அதே அடிப்படையில்தான் இந்த ஆறு பேரின் விடுதலையும் உத்தரவிடப்பட்டுள்ளதாக தற்போதைய தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கைதிகள் முப்பதாண்டுகளுக்கும் மேலாகச் சிறைத் தண்டனை அனுபவித்துவிட்ட நிலையில், சிறையில் அவர்களின் நன்னடத்தை, அவர்கள் உயர்கல்வி பயின்றது,



இவற்றையும், அவர்களின் விரைவான விடுதலை கோரிய கருணை மனுக்களைப் பரிசீலனை செய்வதில் தமிழக ஆளுநர் உட்பட அதிகாரிகளின் மெத்தனப் போக்கையும் கவனத்தில் கொண்டே இத்தீர்ப்பு வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், இந்த ஆறு பேரும் போதுமான தண்டனையை அநுபவித்து விட்டனர் என்றும், இப்போது குடும்பம் மற்றும் சமுதாயத்தில் இவர்கள் சேர்ந்து வாழும் காலம் வந்துவிட்டது என்றும் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. இவர்களின் விடுதலை குறித்த தீர்ப்பை நியாயப்படுத்திய நீதிமன்றம், அவர்களால் சமுதாயத்துக்கோ நாட்டுக்கோ எந்த அச்சுறுத்தலும் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளது. ஆனால், வியாழனன்று மத்திய அரசு தாக்கல் செய்துள்ள மறு சீராய்வு மனுவில் இந்த ஆறுபேரும் விடுதலை செய்யப்பட்டு, அவர்கள் குடும்பத்துடன் இணைய அநுமதிக்கும் தீர்ப்பைக் கடுமையாக எதிர்த்துள்ளது.

தத்தம் குடும்பத்துடன் இணைந்து வாழக் காத்திருப்பவர்களில் நளினியும் அவரது கணவன் சிறிஹரன் என்கிற முருகனும் அடக்கம். என் முந்தைய 'ஈழநாடு' கட்டுரையில் நான் குறிப்பிட்டிருந்தது போல், ராஜீவ் காந்தி கொலைக்கு ஓரிரு நாட்களுக்குள், இந்தத் தம்பதிகள் கைதானபோது, நளினி கர்ப்பமாக இருந்தார். சிறையிலேயே ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்தார். சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட இரண்டு நாட்களில் நளினி, செய்தியாளர் சந்திப்பில், முதலில் மரண தண்டனை விதிக்கப்பட்டபோதும், பின்னர், காலக்கெடு தெரியாத ஆயுள் தண்டனையாக அது குறைக்கப்பட்டபோதும், தனிச் சிறையில் தான் இருந்ததனால், பிரசவத்திற்கும் வர மருத்துவர்கள் மறுத்ததையும், மற்றும் சில சிறைக் கொடுமைகளையும், தங்கள் மகள் ஹரித்ராவைச் சந்திக்கக்கூட முடியுமா என்று அவர்கள் அடைந்த வேதனை குறித்தும் வெளியிட்டார். மகள் ஹரித்ரா தற்போது, இங்கிலாந்தில் மருத்துவராகத் தன் கணவனுடன் வாழ்ந்து வருகிறார். இரண்டாண்டுகளுக்கு முன், வேலூருக்கு அருகில் நடந்த அவரது திருமணத்தை நடத்திவைக்க, அவரது பெற்றோர் பரோலில் வந்திருந்தனர். இப்போது, மகிழ்ச்சியுடன் குடும்பத்துடன் ஒன்றிணையவேண்டிய நேரம் என்று அந்தச் செய்தியாளர் சந்திப்பில் நளினி கூறினார். இதுவரை கருணையுடனும் இரக்கத்துடன் நோக்கினால், புரிந்து கொள்ளக்கூடியதே. அதன் பிறகு, முப்பதாண்டுகளுக்குப் பிறகு, சுதந்தரப் பிரஜையாக வலம் வரும் நளினி, ஊடகங்களைச் சந்திப்பதில் உற்சாகம் மீறி, கொஞ்சம் அதிகமாகவே பேசிவிட்டார். தான் ஒரு நிரபராதி என்றும் குற்றம் நடந்த இடத்தில்கூட தான் இல்லை என்றும் அவர் கூறினார். ஒரு மைல் தொலைவில் சாலையோரத்தில் இருந்த இந்திரா காந்தி சிலை அருகில் தான் இருந்ததாகவும் ஊடகங்களிடம் அவர் கூறினார்.

அதனால் என்ன? கொலைக் குழுத் தலைவன் சிவராசன், சம்பவத்துக்கு முந்தைய இரவில் தனது சகாக்களுக்கு அளித்திருந்த அறிவுரைப்படி, தற்கொலைக் குண்டு வெடிக்கச் செய்பவரையும், அதைப் படம்பிடிக்கத் தான் ஏற்பாடு செய்திருந்த புகைப்படக்காரர் ஹரிபாபுவையும் தவிர மற்ற குழுவினர், அந்த இடத்தை விட்டு விரைவில் அகன்று, முன்னரே முடிவு செய்யப்பட்ட ஓரிடத்துக்கு வந்து, அங்கிருந்து அவரவருக்கான பாதுகாப்பான மறைவிடங்களுக்குச் சென்றுவிடவும், அதற்குப் பிறகு, படகில் ஈழத்தை அடையவும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன. எனவே, சம்பவ இடத்தில் தான் இல்லை என்று நளினி சொன்னது ஒரு போலி வாதத்துக்குச் சரியாகத்

தோன்றினாலும், தனக்கு எதுவும் தெரியாது என்றும், தான் ஒரு நிரபராதி என்றும்

கூறியதன் மூலம் அவர் பொய்யுரைத்துள்ளார். சம்பவம் நடந்த பிறகு நிகழ்ந்தவற்றை ஒன்றாகக் கோர்த்து ஒரு தீர்வை எட்டுவதில் சிறப்புப் புலனாய்வுக் குழுவின் காவல் துறை அதிகாரிகள் சிறப்பாகச் செயல்பட்டிருந்தாலும், இந்தக் கொலை திட்டமிடப்பட்ட விதம், அதில் தொடர்புடையவர்கள் குறித்த தெளிவான முடிவை எட்டுவதில் அந்தக் குழு சற்று அலட்சியமாகவே செயல்பட்டது என்று நான் பல முறை எழுதிவந்திருக்கிறேன். சிறப்புப் புலனாய்வுக் குழுவின் குற்றப்பத்திரிகையில் பெரிய ஓட்டைகள் பல இருப்பதாகவே நான் உணர்ந்தேன். ராஜீவ் காந்தி கொலைக்குப் பின்னால் இருக்கும் பெரிய சதி குறித்து விசாரணை செய்த



ஜெயின் கமிஷன் பரிந்துரைப்படி, 1998இல் அமைக்கப்பட்ட மல்ரி டிசிப்ளினரி மொனிற்ரரிங் ஏஜென்சி (MDMA) என்ற அமைப்பு என்ன ஆனது என்று நான் கேள்வி எழுப்பினேன். அண்மையில், ஒக்ரோபர் 18 அன்று, ஒரு செய்தியைக் கண்டேன். இந்த 24 ஆண்டு பழைமையான எம்டிஎம்ஏ அமைப்பை மத்திய அரசு கலைத்து விட்டது என்றும், பல மத்திய பாதுகாப்பு அமைப்புகளிலிருந்தும் அதிகாரிகளை உள்ளடக்கி, சிபிஐக்குக் கீழ் பணியாற்றி வந்த இந்த அமைப்பு மே 2022இல் கலைக்கப்பட்டு, அதன் பணி, சிபிஐ-யின் ஒரு பிரிவுக்கு மாற்றப்பட்டு விட்டது என்றும் அதிகார வட்டாரங்களிலிருந்து கிடைத்த தகவல் என்று பி ரி ஐ வெளியிட்டிருந்தது.

மூத்த உளவுத்துறை அதிகாரிகளை உள்ளடக்கிய எம்டிஎம்ஏ, பல நாடுகள் சம்பந்தப்பட்ட மாபெரும் சதி குறித்துப் பெருமளவில் எந்த வெளிச்சமும் பாய்ச்சவில்லை என்று அதிகாரிகள் ஒப்புக்கொண்டதாகவும் பிரிஐ செய்தி தெரிவிக்கிறது. வங்கிப் பரிவர்த்தனைகள் உட்பட, இந்த வழக்கின் பல்வேறு அம்சங்கள் குறித்துத் தகவல் கோரி, இலங்கை, இங்கிலாந்து, மலேசியா போன்ற நாடுகளுக்கு 24 கடிதங்களை எம் டி எம் ஏ அனுப்பியுள்ளது. அவற்றில் 20 கடிதங்களுக்குப் பதில் வந்துள்ளன. இன்னும் மிகச் சிலவே எஞ்சியுள்ளன. விசாரணை முற்றுப்பெறும் நிலையில் இருப்பதாகவும், இந்தக் கடிதங்கள் குறித்து சிபிஐ கையாளாது என்றும் இந்த பிரிஐ செய்தி கூறியுள்ளது.

(20ம் பக்கம் பார்க்க)

# டொனால்ட் ட்ரம்பின் மீள் வருகை!

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப் போவதாக அறிவித்திருக்கிறார். அமெரிக்காவை மீண்டும் பாரிய புகழ்பெற்ற நோக்குடன் 2024ஆம் ஆண்டு தேர்தலில் களமிறங்குவதாக அறிவித்துள்ளார்.

ட்ரம்ப், அமெரிக்க காங்கிரஸில் இரு முறை குற்றம் சாட்டப்பட்டு அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டது. கடந்த ஆண்டு ஜனவரி 6ஆம் திகதி காங்கிரஸ் கட்டடத்தின் மீது தாக்குதல் நடாத்திய மக்கள் கூட்டத்தின் நடவடிக்கைகளுக்கு பொறுப்புக்கூற வேண்டியவராகவும் ட்ரம்ப் உள்ளார்.

இவர், கட்சிக்குள் பாகுபாட்டை உண்டாக்கியதுடன் பல வன்முறைகள் உருவாகுவதற்கும் காரணமானவர் உள்ளிட்ட பல குற்றசாட்டுகளுக்கு மத்தியிலும் தற்துணிவுடன் மீண்டும் தேர்தலில் பிரவேசிக்கும் அறிவிப்பினைச் செய்துள்ளார்.

அது மட்டுமன்றி, குடியரசுகட்சியின் வெற்றி தனது கைகளிலேயே உள்ளது என்று கூறிவரும் ட்ரம்ப் தன்னையே அக்கட்சி அதிகாரபூர்வமாக முன்நிறுத்தியுள்ளதாகவும் சில குறிப்பிட்டு அதனை சஞ்சிகைகளில் பிரசுரிப்பதற்கும் காரணமாகியுள்ளார்.

கடந்த வாரம் இடம் பெற்ற இடைத் தேர்தலில் ட்ரம்ப்புக்கான ஆதரவு சற்று குறைந்தே இருந்தது. இருந்தபோதிலும் அமெரிக்க ஜனாதிபதி பதவியிலிருந்து விலகி இரண்டு வருடங்களாகி விட்ட நிலையிலும் தனது நற்பெயரும், புகழும் இன்னமும் மக்கள் மத்தியில் உள்ளதாக ட்ரம்ப் கருதுகின்றார்.

இதற்கு காரணமுண்டு. இடைத் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடனின் ஜனநாயகக் கட்சிக்கு மிகக் கடுமையான போட்டியைக் கொடுத்ததுடன் அமெரிக்க காங்கிரஸின் உயர் சபையில் ஒருபிரதிநிதி வித்தியாசத்திலேயே ஜனநாயகக்கட்சி தனது முன்ணனி நிலையை உறுதி செய்துள்ளது. இந்தநிமையானயால் தான் தனக்கு இன்னமும் அமெரிக்க மக்கள் மனங்களில் இடமுண்டு என்று கருதுகிறார் முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப்.

இடைதேர்தல் பிரசாரங்களின் போது ட்ரம்ப் மிகக்கடுமையாக தனது எதிரணியினரை தாக்கினார். தனக்கே உரிதான கேலிகள் அமெரிக்கத் தேசியவாத சொல்லாடல்கள் ஆகியவற்றை அதற்காகப் பயன்படுத்தினார். இதனால் அமெரிக்க சஞ்சிகையான நியூ ஸ்வீக், ட்ரம்ப்பின் பெயருக்கு முன்பாக 'அதிஅபாயமான' என்ற சொற்பதத்தை குறிப்பிட முடியும் என்று கோடிட்டுக் காட்டியுள்ளது.

கடந்த காலங்களில் பல ஆய்வாளர்கள் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் மிகுந்த




வன்முறைகளை நாட்டிற்குள் அறிமுகம் செய்யவுள்ளது என்று குறிப்பிட்டு இருந்தனர். அது அமெரிக்க ஜனநாயகத்துக்கு பெரும் கறையை ஏற்படுத்தவுள்ளது என்றும் குறிப்பிட்டிருந்தனர்.

அமெரிக்காவில் அதிகமான மக்கள் தொடர்பு சாதனங்களை எதிரியாக கொண்டுள்ள ட்ரம்ப் தனது பாணியிலான கேலியான, அடிப்படை தேசியவாத செயற்பாடுகள் கருத்துக்கள் மூலம் தன்னை மக்கள் மத்தியில் நிலைத்து வைத்திருப்பதில் வல்லவர் என்பது பொதுப்படையானது.

இதனால் ஜனாதிபதி தேர்தல் போட்டியில் களமிறங்கவுள்ள ட்ரம்ப்க்கு எதிராக அமெரிக்க மக்களின் வாக்குகளுக்கு அப்பால் புறக்காரணிகள் பலவற்றையும் அவருக்கு எதிராகத் திருப்பி விடுவதில் எதிரணியில் செயற்படும் பலரும் மிக கவனமாக காய்களை நகர்த்துகின்றனர்.

ஆனால் அந்தப்புறக் காரணிகளே அவர் மீண்டும் போட்டியிடுவதற்கு காரணம் என்ற கருத்துக்களும் காணப்படுகின்றது.

ட்ரம்ப் 2020ஆம் ஆண்டு இடம் பெற்ற தேர்தலின் முடிவுகளை மதிக்காது திரிபுபடுத்த முற்பட்டமை, காங்கிரஸ் கட்டடத்தில் தாக்குதல்களுக்கு காரணமாக இருந்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளுக்காக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

காங்கிரஸ் கட்டட தாக்குதல்கள் தொடர்பில் பிரத்தியேகமான விசாரணைக் குழுவின் அறிக்கை மிகவிரைவில் வெளிவரவுள்ளது. இந்த அறிக்கை வெளிவருமிடத்து ட்ரம்ப் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யவதற்கு உத்தரவிடப்படலாம். 2020இல் ஜோர்ஜியா மாநிலத்தில் தேர்தல் முடிவுகளை மாற்றம் செய்ய முற்பட்டமை குறித்த அறிக்கையையும் பிறிதொரு விசாரணைக்குழு சமர்ப்பிக்கவுள்ளது. இதுவும் கூட ட்ரம்ப்புக்கு சாதகமானதாக இருக்கப் போவதில்லை.

அது மட்டுமல்லாது அவரது பெயரில் உள்ள நிறுவனம் பல வரிஏய்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட குற்றசாட்டுக்களையும் எதிர் கொண்டுள்ளது. இந்த நிலையில் அமெரிக்கச் சட்ட வழமைக்கு அமைவாக, ஒரு ஜனாதிபதி வேட்பாளர் மீது சட்ட நடவடிக்கைகள் எடுப்பதிலும் பல சிக்கல்கள் உள்ளன.

அமெரிக்காவைப் பொறுத்த வரையில் பல்வேறு மாநிலங்களிலும் வேறுபட்ட சட்ட அமைப்புக்கள் இருக்கின்றன. ஆகவே அவற்றை தனக்கு சாதமாக்கிக் கொள்கின்ற பிரசாரத்தந்திரம் ட்ரம்ப்பிடம் உள்ளது என்பது பரகசியமானது.

இந்நிலையில் ஜனாதிபதி பைடன் இந்தோனேஷியாவின் பாலித்தீவில் இடம்

கட்டுரையாளர்:
- லோகன் பரமசாமி -

பெற்று வரும் ஜி-20 கூட்டத் தொடரில் பங்குபற்றுள்ளார். இவ்வாறான நிலையில் ட்ரம்ப் விடுத்துள்ள மீள்வருகை அறிவிப்பு சர்வதேச ரீதியாக பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ட்ரம்ப் தனது ஆட்சி காலத்தில் சர்வதேச விவகாரங்களில் தனது இராணுவச் செலவுகளைக் குறைத்து அமெரிக்காவை முதன்மைப்படுத்தி உள்நாட்டு உற்பத்தியில் அதிகளவான கவனத்தைச் செலுத்தியிருந்தார். ட்ரம்ப் சர்வதேச பாதுகாப்புச் செலவீனங்களில் அதிகளவில் ஈடுபாடு காட்டாத நிலைமையொன்றும் இருந்தது.

இதனால், தனது கடந்தகால நகர்வுகளை முன்னுதாரணமாக கொண்டு உள் நாட்டில் அதிக செல்வாக்கைப் பெற்று கொள்வதற்கு ட்ரம்ப் முயல்வார் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. இந்த விடயத்தில் தான் ஜனாதிபதி பைடனுக்குச் சிக்கலான நிலைமைகள் ஏற்படலாம்.

ஏனெனில் உக்ரேனுக்கு அமெரிக்கா பாரிய அளவில் உதவிகளைச் செய்து வருவதோடு, தாய்வான் விவகாரத்திலும் அதீத அக்கறை கொண்டவராக பைடன் காணப்படுகின்றார். இதனால் பாதுகாப்புச் செலவீனங்கள் மேலும் அதிகரிக்கலாம் என்று எதிர்வு கூறப்படுகின்றது. ஆகவே அது ட்ரம்புக்குச் சாதகமாகலாம்.

இருப்பினும், அண்மைக்காலமாக அதிகளவு கரிசனைகள் கொள்ளப்பட்டுள்ள காலநிலை மாற்றம் விடயத்தில் பைடனின் அளவிற்கு ட்ரம்ப் கரிசனை கொள்ளவில்லை என்பதும் முக்கியமானதாகின்றது.

# ராஜீவ் கொலைக் கைதிகள்

(19ஆம் பக்கத் தொடர்ச்சி)

## 28 ஆண்டுகளாக இழத்தடித்த எம்.டி.எம்.ஏ

விசாரணை முடிவுறும் தறுவாயில், இதை முடக்கி, சிபிஐ-யின் ஒரு பிரிவுக்கு இதை மாற்ற மத்திய அரசு முடிவு செய்ய என்ன காரணம்? 1991 பொதுத் தேர்தல்களில் வென்று அடுத்த பாரதப் பிரதமராகியிருக்க வேண்டிய ஒருவரின் கொலையில் எல்ரிரிஈ-க்கு உதவிய இந்திய மற்றும் வெளிநாட்டு சக்திகளை வெளிக்கொண்டு வருவதில் இந்திய அரசு உண்மையிலேயே முனைப்பு காட்டுகிறதா? இந்தச் சதித்திட்டத்தில் தொடர்புடையதாகச் சில சுவாரஸ்யமான மற்றும் செல்வாக்குமிக்க பெயர்களும் நாடுகளும் பேசப்பட்டிருந்தன. ஆனால், எந்த வலுவான ஆதாரமுமின்றி, வெறும் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் அந்தப் பெயர்களை இங்கு நான் குறிப்பிடுவது நியாயமாகாது என்பதால் நான் அதைச் செய்யவில்லை.

அந்த ஆதாரத்தை எம்டிஎம்ஏ வெளிச்சத்துக்குக் கொண்டு வரத் தவறியது துரதிர்ஷ்டவசமானது என்றாலும், புரிந்து கொள்ளக் கூடியதும் கூட. சிறப்புப் புலனாய்வுக் குழுவின் குற்றப் பத்திரிகையைத் தயார் செய்த விசாரணை அதிகாரியான முன்னாள் சி பி ஐ அதிகாரி ரகோத்தமனின் பேட்டியை யூரியூபில் நீங்கள் பார்த்தாக வேண்டும். இந்தப் பேட்டி அவர் ஓய்வு பெற்ற நீண்ட காலத்துக்குப் பிறகு கொடுக்கப்பட்டது. அவர் சிறப்புப் புலனாய்வுக் குழுவில் தீவிரமாக உழைத்த காலத்திற்கும் ஓய்வுக்குப் பிறகு யூ ரியூ ப் கமெராவுக்கு முன் அமர்ந்து பேட்டி கொடுக்கும் காலத்திற்கும் இடையில் இவரில் என்ன மாற்றம் நேர்ந்து விட்டது என்று நான் வியக்கிறேன்.

அந்தப் பேட்டியில் அவர் பிரபாகரனைத் 'தண்டிக்கப்



பட்ட குற்றவாளி' என்று கூறமுடியாது ஏனென்றால், அவர் அப்படியில்லை என்று வெளிப்படையாகப் பேசுகிறார். மேலும் ஈழத்துக்காகத் தன் உயிரைத் தியாகம் செய்த ஒரு மாவீரர் அவரென்றும் புலிகள் தலைவரை இவர் போற்றியுள்ளார். சுவாரஸ்யமாக இருக்கிறதல்லவா?

இதைப் பின்னர் விரிவாகப் பார்க்கலாம். பொட்டு அம்மானின் துணையுடன் பிரபாகரன் தான் ராஜீவ் காந்தி கொலைக்கு உத்தரவிட்டார் என்ற வலுவான ஐயம் பலர் மனதிலும் இருந்தாலும், இரத்தத்தில் ஊறிய திரையின் மறைவில் செயலாற்றிய வேறுபல சக்திகளுக்கும் இதில் பங்குண்டு. இது குறித்து எவ்வளவு வேண்டுமானாலும் பேசப்படலாம், எழுதப்படலாம், படிக்கப்படலாம், யூகிக்கப்படலாம், ஆனால், வலுவான உண்மையாக எதுவும் எக்காலத்துக்கும் வெளியாகாது. கென்னடி கொலைபோன்ற முக்கிய புள்ளிகளின் கொலை வழக்குகள் போலத்தான் இதுவும் மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

(8ம் பக்கத் தொடர்ச்சி) இணைக்கக் கூடாது என்று நீங்கள் சொல்லக் கூடாது என்றார்.

இத்தனை வருட போராட்ட வாழ்வில் எத்தனை அதிவிசுவாச நடிகர்களை அரசியலில் சந்தித்திருப்பார் தலைவர். அவர் உடனே இவர் (அரியநேத்திரன்) அந்த மக்களின் பிரதிநிதி. தன்னுடைய மக்களின் உணர்வைப் பிரதிபலிக்கிறார் இவர். இம்மோதலில் உயிரிழந்தவர்கள் ஏற்கெனவே எம்முடன் இருந்து விசுவாசமாகச் செயற்பட்டவர்கள் தானே என்று சொல்லி கஜேந்திரன் தன்னுடைய அளவை தான் புரிந்து கொள்ள வேண்டும் என்று மறைமுகமாக உணர்த்தினார். அப்படியிருந்தும் காணிக்கு பின்னுரித்து போட்டு எழுதுவது போல மாவீரர் தொடர்பான விடயங்களை முடிவெடுக்கும் ஏகபோக அதிகாரத்தைத் தலைவர் தந்து விட்டுப் போயிருப்பதாக உணர்த்த முனைகின்றனர். தரவை உள்ளிட்ட மாவீரர் துயிலும் இல்ல நினைவேந்தல் குழுக்களை அலட்சியப்படுத்தி தன்னிச்சையாக முடிவெடுக்கின்றனர்.

எந்த இலட்சியத்திற்காக இந்த மண்ணில் மாவீரர்களானார்களோ அவர்களது ஆன்மாவைக் கொச்சைப்படுத்தும் முயற்சிகளை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியினர் கைவிட வேண்டும். முதலில் வேறு எந்த இயக்கத்தில் இருந்து உயிரிழந்தவர்களின் பெற்றோரைக் கூட்டிக் கொண்டு வந்து முதன்மைச் சுடரேற்ற வைத்தாலும் வைப்பார்கள். இவர்களின் மறுபக்கத்தை தாயகத்தில் உள்ளோர் மட்டுமல்லாது புலம் பெயர்ந்து வாழும் உறவுகளும் புரிந்து கொள்ள வேண்டும். எந்தக் காலத்திலும் தங்கள் பெயர் மாவீரர் பட்டியலில் இடம் பெறாது எனத் தெரிந்து கொண்டும் தம்முயிரை ஆகுதியாக்கிய மாவீரர்களுமிருக்கிறார்கள். அவர்கள் வாழ்ந்த மண்ணில் அரசியல் இலாபத்துக்காக இக்கட்சியினர் செய்யும் கோளாறுகளை நிறுத்த ஒவ்வொருவரும் தங்களாலான முயற்சிகளைச் செய்யவேண்டும் என்றுள்ளது.

# இலங்கைத்தீவின் அரசியல் பொருளாதார நெருக்கடிக்கான தீர்வு சாத்தியமானதா?

இலங்கைத்தீவின் அரசியல் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு சாத்தியமானதா என்ற கேள்வி பலராலும் எழுப்பப்படுகிறது. அநேகரது வாதம் சாத்தியமான செய்முறை எதனையும் அரசாங்கம் மேற் கொள்ளவில்லை என்பதாகவே உள்ளது. ஆரம்ப காலப் பகுதியில் ஏற்பட்ட நெருக்கடிக்கு மீளவும் இலங்கைத்தீவு மக்கள் செல்லாமல் இருப்பதற்கான நிபந்தனைகளை உலகவங்கி அரசாங்கத்துடன் உரையாடி வருவதாகவும் அதில் சிலவற்றை அமுல்படுத்த ஆரம்பித்து விட்டதாகவும் விவாதங்கள் உண்டு.

இதேநேரம் இலங்கைக்கு உதவும் விதத்தில் கனடாவிலிருந்து புலம்பெயர்ந்தவர்களது முதலீடுகளை கொண்டு வரும் நோக்கிலான நகர்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டது போல் ஐக்கிய நாடுகள் சபை உலக நாடுகளிடம் இலங்கைக்கு உதவி கோரியுள்ளமை மற்றும் உலக வங்கியுடனான உரையாடல்கள் என பலவிடயங்கள் முதன்மைப்படுத்தப்படுகின்றன.

ஆனால் இத்தகைய நடவடிக்கைகள் ஏற்படுத்தப் போகும் விளைவுகளைக் காட்டிலும் இலங்கைத்தீவு ஆபத்தான நிலைமைக்குள்ளே இருப்பதாகவும் அதற்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதும் எழும் புதிய விவாதமாக உள்ளது.

முதலாவது, இலங்கைத்தீவில் எழுந்துள்ள நெருக்கடியை வெறும் பொருளாதாரத் தளத்தில் புரிந்து கொள்ளாது அரசியல், பொருளாதாரத் தளத்தில் வைத்து புரியப்பட வேண்டும் என்பது புலமைசார் விவாதமாக உள்ளது. அதாவது இன்றைய நெருக்கடிக்கு இன முரண்பாடாக ஆட்சியாளர் செயல்பட்டதும் தேர்தலில் வாக்கினைப் பெறுவதற்கான நலத்திட்டங்களை முதன்மைப்படுத்தியதும் தெளிவான பொருளாதாரக் கொள்கை வகுக்காத அரசியல் தலைவர்களது நடவடிக்கைகளுமே காரணமாக விளங்கப்படுகிறது.

இவற்றை மையப்படுத்தி அதிகார வர்க்கம் செயல்பட்டதன் நேரடி விளைவுகளாகவே தற்போதைய நெருக்கடி காணப்படுகிறது. இதனை தற்போதைய ஆட்சியாளர்கள் மட்டுமல்ல கடந்த கால ஆட்சியாளர்களும் ஏற்றுக் கொள்ள தயாரின்மை மட்டுமல்ல அதன் பலவீனத்திலிருந்து மீள்வதற்கு ஆட்சியாளர்களும் அதன் ஆலோசகர்களும் தயாரில்லாத நிலையே காணப்படுகிறது. அதாவது கடந்த காலத் தோல்விகளிலிருந்து அல்லது அனுபவங்களிலிருந்து பாடங்களை கற்றுக் கொண்டு மீள்வதற்கான எந்த உத்தியும் தற்போதைய அரசியல் தளத்தில் இல்லாதுள்ளது.

இரண்டாவது, இலங்கைத்தீவின் பணிக் குழுவினரது எண்ணிக்கையை மட்டுப்படுத்த வேண்டும் என்ற விவாதத்தை உலக வங்கி முன் வைத்து வருவதாக தெரியவருகிறது. ஆனால் இலங்கைத் தீவு முழுவதும் பணிக் குழுவினரது நியமனத்திலிருந்து அவர்களது பதவி உயர்வு வரையுமான நடவடிக்கைகள் அனைத்தும் ஏதோ ஒரு வகையில் அரசியல் தலையீடு சார்ந்ததொன்றாகவே தெரிகிறது.

அரசியல்வாதிகளும் ஆட்சியாளர்களும் பணிக் குழுவை கட்டமைப்பதும் பாதுகாப்பதும் உயர்நிலைக்கு கொண்டு செல்வதையும் அரசியல் தேவைக்காக மேற் கொள்கின்றனர். அதற்கான தீர்மானங்களும் முடிவுகளுமே நாட்டின் சிதைவுக்கு அதிக பங்கெடுத்த காரணியாக உள்ளன. குறிப்பாக எந்த பதவி நிலையும் அரசியல் தலையீடு இன்றி நிகழ்வதாகத் தெரியவில்லை. நியமனமே தேர்தல் வாக்குறுதியாக அல்லது தேர்தலுக்கு வாக்குப் பெறுவதற்கானதாக அமைந்துள்ளதே அன்றி திறமையின் அடிப்படையில் நிகழ்வதாகத் தெரியவில்லை. அவ்வாறான நிலை ஏற்படும் போது வினைத்திறனான சேவை என்பது சாத்தியமாகும் என்ற கேள்வி நியாயமானதாகவே தெரிகிறது. தென்கிழக்காசிய மற்றும் கிழக்காசிய நாடுகளது எழுச்சிக்கு திறனை அடிப்படையாகக் கொண்ட பணிக் குழுவே காரணமென பின்காலனித்துவ சிந்தனையாளரான ஹம்சாஅலவி குறிப்பிடுகின்றார். பாகிஸ்தானை மையப்படுத்திய அவரது ஆய்வுகள் இராணுவ மேலாதிக்கத்திற்கான காரணங்களைத் தேடுவதாக அமைந்தபோதும் ஜப்பானுடைய வெற்றிக்கும் பாகிஸ்தான்,





பங்களாதேஷ் போன்றவற்றின் தோல்விக்கும் இடையிலான காரணங்களைத் தேடும்˙போது பணிக் குழுவின் மீதான அரசியல் தலையீடு பிரதான கருப்பொருளாக முதன்மைப்படுத்துகின்றார். அதனடிப்படையிலேயே இலங்கைத்தீவின் கடந்த காலமும் சம காலமும் திட்டமிடப்படுகிறது. இது மீட்சி பெறுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்துமெனக் கூறமுடியாது. மாறாக மீளவும் அதே சுழிக்குள் வீழ்வதாகவே அமையும்.

மூன்றாவது, தென்னாசிய ஊழல் நாடுகள் பட்டியலில் பங்களாதேஷ், பாகிஸ்தான், இந்தியா போன்ற நாடுகளுக்கு பின்பே இலங்கைத் தீவுகாணப்படுகிறது. ஆனால் இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்குப் பின்னால் ஆட்சியாளர்களது ஊழல் பிரதான விடயமாகவே தெரிகிறது. சுதந்திரமடைந்த காலத்திலிருந்து ஆட்சிக்கு வந்த ஆட்சியாளர்கள் அனைவரும் ஏதோ ஒரு தளத்தில் ஊழல் பெயர் வழிகளாகவே கணிப்பிடப்பட்டுள்ளனர். ஆட்சிக்கு வருகை தந்த பின்னர் அவர்களது பொருளாதார இருப்பு, சொத்தில் ஏற்பட்ட மாற்றம், நலச் சேவைகளை கையாண்ட விதம் என்பனவற்றை அவதானிக்கும் போது ஊழல் பெரும் பாதிப்பை தந்துள்ள விடயமாகவே தெரிகிறது.

இதற்காக எந்த அரசியல் தலைவரோ அதிகார வர்க்கத்தைச் சேர்ந்தவரோ சிறைக்குச் சென்றதாக வரலாறு கிடையாது. அப்படியாயின் ஊழலற்ற நாடாக விளங்குமாக இருந்தால் பொருளாதாரம் ஆரோக்கியமாக அமைந்திருக்க வேண்டும். எனவே தான் ஊழல் என்பது ஆட்சியாளர்களால் அங்கீகரிக்கப்பட்டதொன்றாக உள்ளதாக தெரிகிறது. மத்திய வங்கி ஊழல் மட்டுமல்ல அண்மைய ஆட்சியாளரது பண்டோரா ஊழலோ அல்லது உகண்டா முதலீட்டு ஊழல் விடயமோ எந்த அடிப்படையிலும் விசாரணைக்கோ அல்லது விவாதத் திற்கோ கொண்டு வரப்படவில்லை. மத்திய வங்கி எப்படி காலியானதென்பது கூட விவாதிக்கப்படவில்லை. இவ்வாறான சூழலில் நாட்டின் பொருளாதாரத்தை எவ்வாறு மீட்டெடுப்பதென்பது கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும். இதன் மூலம் ஊழல் என்பது சாதாரண விடயமாகவும் அரசாங்கத்தால் அங்கேரிக்கப்பட்ட விடயமாகவும் அமையும் போது எந்த அடிப்படையில் மாற்றத்தைச் செய்தாலும் தற்போதைய ஆட்சியாளர் இல்லாது விட்டாலும் இன்னோர் ஆட்சியாளர் மத்திய வங்கியை காலியாக்குவது குற்றமாகக் கருதப்படமாட்டாது என்ற எண்ணத்துடனேயே ஆட்சியில் அமர வாய்ப்புள்ளது.





நான்காவது, இலங்கைத்தீவின் வெளியுறவுக் கொள்கையில் எத்தகைய மாற்றத்தையும் அரசாங்கம் மேற் கொண்டதாகத் தெரியவில்லை. இலங்கையின் வெளியுறவின் முக்கியத்துவம் சார்ந்து காமினிக் கொரயா, இன்சூக் உடின் போன்றவர்கள் குறிப்பிடும் போது இலங்கைத் தீவின் உயிர் வாழ்வு அதன் வெளியுறவிலேயே தங்கியுள்ளது எனத் தெரிவித்துள்ளனர். அவ்வாறான முக்கியத்துவத்தை உணராத ஆட்சியாளர்கள் இலங்கைத் தீவை சீன சார்பு வெளியுறவுக்குள் மீளவும் உட்படுத்திக் கொண்டுள்ளனர்.

ஏறக்குறைய இந்து சமுத்திரத்தின் மத்தியிலும் இந்தியாவுக்கு அருகாமையிலும் இலங்கைத்தீவு அமைந்திருப்பதனால் தவிர்க்க முடியாத முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது. அதனால் உலகத்தோடு ஒத்துழைப்பதுடன், இந்தியா மேற்குலக நாடுகளுடனான வெளியுறவையும் சீனாவுக்கு சமதையாக பின்பற்ற விளைந்திருக்க வேண்டும்.

ஆனால் அவை எதனையும் மேற் கொள்ளாது தனித்து உள்நாட்டில் எழுந்துள்ள இனப்பிரச்சினையை கையாள வேண்டும் என்ற ஒரே நோக்குடன் சீன சார்பு வெளியுறவை கடைப்பிடிக்க முனைந்தது. அதன் விளைவாகவே ஜி.எஸ்.ரி. வரிச் சலுகையும் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்றவற்றின் கடன் மற்றும்


கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
பேராசிரியர்
*K.T.*கணேசலிங்கம்





உதவிகள் காணாமல் போனமையும் நிகழ்ந்துள்ளது. ஆனால் இவை எதனையும் தற்போதைய ஆட்சியாளர்கள் மாற்றிக் கொள்வதாகத் தெரியவில்லை.


தாராளவாதியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அடையாளப் படுத்தினாலும் நடைமுறையில் சீனச் சார்பு ஆட்சியாளராகவே அதிகம் காணப்படுகின்றார். மேற்குலக நாடுகள் எவையும் முழுமையாக இலங்கைத்தீவை மீட்டெடுக்க உதவ முன்வராத நிலை நீடிக்கிறது. மிக நீண்டகாலமாக அதிக கடனை இலங்கைக்கு வழங்கிய ஜப்பான் கூட அதிக கவனம் கொள்ளாதிருப்பதற்குப் பின்னால் இலங்கைத் தீவின் வெளியுறவுக் கொள்கையே காரணமாகவுள்ளது.

ஐந்தாவது, இலங்கைக்கும் இந்தியாவுக்குமான இராஜதந்திர முறுகலானது, உலக நாடுகளை எச்சரிக்கைக்குள்ளாக்குவதாகவே தெரிகிறது. அதிக ஒத்துழைப்பையும் உறவையும் கொண்டிருந்த இந்தியா, அதிக முரண்பாடான நகர்வுகளை மறைமுகமாக மேற் கொள்கிறது. அதனால் உலக நாடுகள் இந்தியாவின் சந்தையை இழக்க முடியாத நிலையில், தமது இலங்கை மீதான தலையீட்டையும் தொடர்பையும் எல்லைப்படுத்திக் கொள்ள முயல்வன என்பது தெளிவான புரிதலாகவே தெரிகிறது. (22ம் பக்கம் பார்க்க)


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! எந்த ஒரு காரியத்திலும் சரியான முடிவுக்கு வர முடியாமல் இருந்த தடுமாற்றம் நீங்கும். சாமர்த்தியமாக எதையும் சமாளிக்கும் துணிச்சல் வரும். எதிர்ப்புகள் குறையும். தொழில், வியாபாரம் சற்று நிதானமாக நடக்கும். எதிர்பார்த்த லாபம் இருந்தாலும் தொழில் தொடர்பான செலவும் கூடும். உத்யோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றமான பலன் காண்பர். புதிய வேலை பற்றிய சிந்தனை அதிகரிக்கும்.




ரிஷபராசி அன்பர்களே! அதிக கோபத்தால் வீண்பகை உண்டாகலாம். அடுத்தவர் விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கி செல்வது நல்லது. ஆடம்பர செலவுகள் ஏற்படும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு கூடுதல் பணிச்சுமை, இடமாற்றம், அலைச்சல் போன்றவை இருக்கக்கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். பிள்ளைகள் பெருமை சேர்ப்பார்கள்.




மிதுனராசி அன்பர்களே! காரியங்கள் தாமதமாக நடந்தாலும் வெற்றிகரமாக நடக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான நெருக்கடிகளை சந்திக்க வேண்டி வரும். புது வியாபாரம் தொடர்பான காரியங்கள் சாதகமாக முடியும். குடும்பத்தில் இருப்ப வர்களின் செய்கைகள் உங்களது கோபத்தை தூண்டுவதாக இருக்கும். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்படும். பிள்ளைகளை அனுசரித்து செல்வது நல்லது.




கடகராசி அன்பர்களே! பிடிவாதத்தை விட்டு விடுவது காரிய வெற்றிக்கு உதவும். கடிதப் போக்குவரத்து நன்மை தரும் தொழில் வியாபாரத்தில் சற்று விழிப்புடன் இருப்பது நல்லது. எதிர் பார்த்த பணம் கைக்கு வர தாமதம் ஆகலாம். உத்யோகத்தில் இருப்ப வர்களுக்கு நிதானம் தேவை. சக ஊழியர்களுடன் சாமர்த்தியமாக பழகி காரிய அனுகூலம் அடைவீர்கள். குடும்பத்தில் இருந்த பிரச்னைகள் தீருமு. உறவினர்கள் தேடி வருவார்கள்.



சிம்மராசி அன்பர்களே! எடுத்த முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். எண்ணியபடி செயல்களை செய்து காரிய வெற்றி காண்பீர்கள். ஆன்மிக பணிகளில் ஈடுபாடு அதிகரிக்கும். திருமண முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். தொழில் வியாபாரம் சுமாராக இருக்கும். எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். நீண்ட நாட்களாக இருந்து வந்த மனக் கிலேசங்களில் தெளிவான நிலை ஏற்படும்.



கன்னிராசி அன்பர்களே! காரிய தாமதம் ஏற்படும். வீண் மனக் கவலை நீங்கும். வாகனங்களில் செல்லும்போது கவனம் அவசியம். நண்பர்கள் மூலம் கிடைக்க வேண்டிய உதவிகள் தாமதப்படும். தொழில் வியாபாரம் திட்டமிட்டபடி சிறப்பாக நடக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். எதிர் பார்த்த நிதி உதவி கிடைக்கும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் சாதகமான நிலை காணப்படும். உத்யோகத்தில் தடங்கல்கள் ஏற்படும்.



துலாம்ராசி அன்பர்களே! எதிர்ப்புகள் மறையும். பகை பாராட்டியவர்கள் பகையை மறந்து நட்புக் கரம் நீட்டுவார்கள். நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்சனைகள் குறையும். எதையும் செய்து முடிக்கும் சாமர்த்தியம் உண்டாகும். தொழில் வியாபாரம் சீராக நடக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் கூடுதலாக பணியாற்ற வேண்டி இருக்கும். பதவி உயர்வு கிடைக்கலாம். குடும்பத்தில் இருப்பவர்களுடன் கோபப் படாமல் நிதானமாக பேசி அனுசரித்து செல்வது நல்லது.




விருச்சிகராசி அன்பர்களே! மன உறுதி அதிகரிக்கும். பூர்வீக சொத்துக்களை அடைவதில் இருந்த தடைகள் நீங்கும். உயர் நிலையில் உள்ளவர்களுடன் இருந்து வந்த மன வருத்தம் நீங்கும். தொழில் வியாபாரம் தொடர்பாக அலைய வேண்டி இருந்தாலும் முடிவில் லாபம் கிடைக்கும். எதிர் பார்த்த கடன் வசதி கிடைக்கும். தொழில் வியாபாரத்திற்கு புதியதாக இடம் வாங்குவீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் அலைச்சலை, வேலை பளுவை சந்திக்க நேரிடும்.







தனுசுராசி அன்பர்களே! நீண்ட நாட்களாக இருந்த பிரச்னை குறையும். மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். வாக்கு வன்மை நன்மையை தரும். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் இருந்த இடையூறுகள் நீங்கும். எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கும். குடும்பத்தில் இருப்பவர்கள் எதையும் வெளிக்காட்டாமல் இன்முகம் கொடுத்து பேசுவார்கள். கணவன், மனைவிக்கிடையே இருந்த வருத்தங்கள் நீங்கும்.



மகரராசி அன்பர்களே! முடங்கி கிடந்த காரியங்கள் அனைத்தும் வேகம் பிடிக்கும். நெருக்கடியான நேரத்தில் உறவினர்கள், நண்பர்கள் உங்களுக்கு கை கொடுப்பர். தொழில் எதிர்பார்த்த அளவு நடக்கா விட்டாலும், லாபம் குறையாமல் இருக்கும். பங்குதாரர்களுடன் இருந்து வந்த பிரச்னைகள் நீங்கும். திறமையான செயல்பாட்டால் பாராட்டு கிடைக்கும். குடும்பத்தில் எதிர்பாராத விருந்தினர் வருகையால் வாக்குவாதங்கள் ஏற்படலாம்.



கும்பராசி அன்பர்களே! எடுத்துக் கொண்ட முயற்சிகளில் காரிய தடை தாமதம் ஏற்படும் உஷ்ண சம்பந்தமான நோய் ஏற்படும். வீண் வழக்கு விவகாரங்கள் வரலாம். எச்சரிக்கையாக செயல்படுவது நல்லது. பார்ட்னர்களுடன் சேர்ந்து தொழில் செய்பவர்கள் கவனமாக செயல்படுவது நல்லது. கடன் தொல்லை தலை தூக்கலாம். எச்சரிக்கையாக இருப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அதிகாரம் கிடைக்கும்.



மீனராசி அன்பர்களே! மற்றவர்களின் உதவியால் காரிய அனுகூலம் உண்டாகும். இதுவரை இருந்த தொல்லைகள் நீங்கும். நீண்ட தூரப் பயணங்களால் லாபம் உண்டாகும். மனதில் தைரியம் பிறக்கும். வாக்கு வன்மை ஆதாயத்தை பெற்று தரும். தொழில் வியாபாரத்தில் இருப்ப வர்கள் கூடுதல் செலவை சந்திக்க நேரிடும். புதிய ஆர்டர்கள் கிடைப்பது வேகமாகும். தேவையான பணஉதவி கிடைக்கலாம். நிலுவையில் உள்ள பணம் வரும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# குறுகிய சந்துக்குள் கூக்குரலிடாமல் விரிந்த வெளியில் சிறகை விரியுங்கள்!

(17ம் பக்கத் தொடர்ச்சி) இந்த அவலமும். அதாவது போருக்குப் பிந்திய அரசியல் என்ன? அதை எப்படி முன்னெடுப்பது? அதற்குப் பொருத்தமான தரப்பு எது அல்லது அதற்கான தரப்புகள் எவை என்பதைக்குறித்த ஆய்வோ, அவதானமே இவர்களிடம் ஏற்படவில்லை.

இதைக் குறித்துச் சிந்திக்க வேண்டும். பகிரங்கமாக உரையாட வேண்டும். இல்லையென்றால் வரலாறு இந்தக் கட்சிகளைக் கழித்து விடுவதைப் போல இதனோடு இணைந்திருப்போரையும் கழித்து விடும். அதற்குத் துணிச்சல் வேண்டும்.

அறிவு என்பது துணிச்சலை அடிப்படையாகக் கொண்டது. துணிச்சல் இல்லாத அறிவினால் பிரயோசனம் ஏதுமில்லை. சோக்கிரட்டீஸ், புருனே போன்றோர் மட்டுமல்ல இன்றைய காலத்தின் அறிஞர்களான நொம் சோம்ஸ்கி, எட்வெட் ஸெய்த், அய்யாஸ் அஹ்மத் போன்ற அனைவருமே துணிச்சலை அடிப்படையாகக் கொண்டவர்கள்.

அதாவது மக்களுக்கான அறிஞர்கள் **(Public Intellectuals)** எனக் கருதப்படுகிறார்கள். அப்படி மக்களுக்கான அறிஞர்களாகச் செயற்பட முற்படும் போது சாதி, பிரதேசம், பால், இனம், மொழி, கட்சி போன்றவற்றின் நெருக்கடி நேரடியாக எழும். இந்தத் தரப்புகளின் முகச் சுழிப்புகளை எதிர்கொள்ள நேரிடும். ஏன், சிலவேளை துரோகி என்ற பெயரைக் கூட ஏற்க வேண்டியிருக்கும்.

ஆனால் துணிவோடு சாதி, பிரதேசம், பால், இனம், மொழி, கட்சி போன்றவற்றுக்கு அப்பால் எழுந்தால் இந்தச் சிறிய எல்லைகள் தகர்ந்து விடும். உலகளாவிய பெரும் வெளியில் ஒளி கொண்ட சிந்தனை மேலோங்கும். அதுவே ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கான வழிகளைப் பற்றிய மெய்யான சிந்தனைக்கு வழியைத் தரும். அதற்கான நடைமுறைகளை உருவாக்கும். நம்முடைய சமூக விடுதலை என்பது தனியே நம்முடைய வட்டத்துக்குள் அமைவதில்லை. அதற்குள் தீர்மானிக்கப்படுவதும் இல்லை. அது பெரிய வலைப்பின்னலில் ஒரு கண்ணியாகும்.

ஒரு காலம் சுதந்திரன் பத்திரிகையும் அதனோடிணைந்த கோவை மகேசன், காசி ஆனந்தன் போன்றோரும் மிகப் புகழோடிருந்த வரலாறுண்டு. பின்னர் அதெல்லாம் நகைப்பிற்கிடமாகி விட்டது. காரணம், அவர்களுடைய எல்லை மிகக் குறுகியதாக இருந்தது. அதைப் போன்ற ஒரு வரலாற்றுச் சூ ழல் திரும்பவும் இன்று வந்துள்ளது. குறுகிய சந்துக்குள் நின்று கூக்குரலிடுவதா? விரிந்த வெளியில் சிறகை விரிப்பதா? என்று சிந்திக்க வேண்டிய காலம்.

ஆகவே இதைப் புரிந்து கொண்டு செயற்படுவதே காலத்தின் விதியாகும். அரசியற் தரப்புகள் அதிகாரம், நலன் என தமது நலன்சார்ந்து செயற்படுகின்றவை என்பதால் அவற்றிடம் மாற்றங்கள் எதையும் பெரிதாக எதிர்பார்க்க முடியாது. ஆனால், அறிவுத்துறையில், ஊடகத் துறையில் இயங்குவோரும் அப்படிச் செயற்பட முற்படக் கூடாது. அது வரலாற்றுக்கு இழுக்காகி விடும். இதைத் தவிர வேறு எதை நான் அவர்களுக்குக் கூற முடியும்?

# இலங்கைத்தீவின் அரசியல் பொருளாதார

(21ம் பக்கத் தொடர்ச்சீ) இந்தியாவுடனான முரண் பாடு என்பது சீனா சார்ந்தது என்பது தெளிவான வரையறையாகும். குறிப்பாக சீனக் கப்பல் ஒன்று கொழும்புத் துறைமுகத்தை அடைந்த போது அதிக விமர்சனங்களையும் இராஜதந்திர ரீதியாக நெருக்கடியையும் கொடுத்த இந்தியா, அமெரிக்கா, அவுஸ்திரேலிய, ஜப்பானிய போர்க் கப்பல்கள் கொழும்பு மற்றும் திருகோணமலைத் துறைமுகங்களை நோக்கி வருகை தரும் போது எந்தவிதமான பதில் நகர்வையும் சாத்தியப்படுத்தாத நிலை காணப்படுவதையேனும் இலங்கை ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ளவில்லையா என்ற கேள்வி சாதாரணமானதாகவே தெரிகிறது. இதனை சீனாவுக்கும் இந்தியாவுக்கும் முரண்பாடு இல்லை என்று கூறிக் கொள்ள முனையும் இந்திய புலமையாளர்களும் விளங்கிக் கொள்வது அவசியமானது.

ஆறாவது இனப்பிரச்சினைக்கு தீர்வை வழங்காது காலத்தை கடத்துவதன் மூலம் இலங்கைத்தீவை முழுமையாக மாற்றி விடலாம் என ஆட்சியாளர்களும் தென்னிலங்கை அரசியல்வாதிகளும் கருதுகிறார்கள். ஆனால் அதன் விளைவுகளே உலக நாடுகளது தலையீட்டுக்கும் குழப்பத்திற்கும் நெருக்கடிக்கும் காரணமாக அமைந்து விடுகிறது என்ற உண்மையை உணரத் தவறுகின்றனர். இலங்கைத் தீவை மாற்றியமைப்பதென்பது புலம்பெயர்ந்த தமிழரது பொருளாதாரத்தால் மட்டுமே ஆரோக்கியமானதாக ஆக்க முடியும். ஏனைய அனைத்தும் அபாயமான விளைவை தரக் கூடியதாகவே அமையும். அதனால் இனப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வை வழங்கி இலங்கைத்தீவை அனைத்து இனங்களும் சுமுகமாக வாழும் சூழலை உருவாக்குவதன் மூலம் அரசியல், பொருளாதார நெருக்கடிக்கு தீர்வை எட்ட முடியும்.

எனவே இலங்கைத்தீவின் அரசியல், பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணுவதென்பது கடந்தகால அனுபவத்திலிருந்து கட்டமைக்கப்பட வேண்டும். ஆட்சியாளர்கள் விட்ட தவறுகளை திருத்திக் கொள்ள வேண்டும். அதற்கான பொறுப்புக்கூறலை ஆட்சியாளர்கள் முன்னெடுக்க தயாராக வேண்டும். அதற்கான வரைபுகளும் திட்டமிடல்களும் ஒழுங்கமைக்கப்பட வேண்டும். இது இல்லாத சூழல் நீடிக்குமாக அமையுமாயின் நிரந்தர மாற்றத்திற்கான சூழல் சாத்தியப்பட வாய்ப்பு குறைவாகவே தெரிகிறது.

# இலங்கையில் பிறப்புச் சான்றிதழில்....

(5ம் பக்கத் தொடர்ச்சி) நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகவும் பதிவாளர் ஜெனரல் தெரிவித்தார்.

ஆயினும் கூட விரும்பினால் தேசியம் சேர்க்கப்படலாம். தந்தை மற்றும் பெற்றோரின் திருமண நிலை பற்றிய தகவல்கள் சேர்க்கப்படாது. தற்போது இத்திட்டம் முன்னோடி திட்டமாக ஏழு பிரதேச செயலகங்களில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அடுத்த வருடம் 100 பிரதேச செயலக அலுவலகங்களில் புதிய தேசிய பிறப்பு சான்றிதழ் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என பதிவாளர் நாயகம் தெரிவித்தார். போலி பிறப்புச் சான்றிதழ்கள் வெளிவருவதைத் தடுப்பதன் மூலமும், மொழிபெயர்ப்பின் தேவையை நீக்குவதன் மூலமும், பெற்றோர்கள் திருமணம் செய்து கொண்டார்களா இல்லையா என்பது பற்றிய விவரங்களை நீக்குவதன் மூலமும் புதிய பிறப்புச் சான்றிதழ் எளிமைப்படுத்தப்படும்.

இதன்படி எதிர்காலத்தில் இலங்கை பிரஜைகளுக்கு சர்வதேச அங்கீகாரம் பெற்ற புதிய பிறப்புச் சான்றிதழை வழங்குவதற்கு இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என அபேவிக்ரம தெரிவித்தார்.